# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மே 2005 ஜீவியம் 11 மலர் 1**

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம் பக்கம்

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *அன்பர் கடிதம்* | 2 |
| *இம்மாதச் செய்தி* | 5 |
| *எங்கள் குடும்பம்* II | 6 |
| *அஜெண்டா* | 40 |
| *லைப் டிவைன்* | 42 |
| *சாவித்ரி* | 50 |
| *யோக வாழ்க்கை விளக்கம்* V | 52 |
| *மனமாற்றம்* | 55 |
| லைப் டிவைன் - கருத்து | 62 |

❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# அன்பர் கடிதம்

**ஸ்ரீ அன்னையின் அருள் பிரவாகம்**

சமீபத்தில் எங்களுக்கு ஏற்பட்ட ஓர் உண்மைச் சம்பவத்தின்மூலம் ஸ்ரீ அன்னை எங்களை எவ்வாறு ஒரு பேராபத்திலிருந்து காப்பாற்றினார்கள் என்பதை ஸ்ரீ அன்னை அன்பர்களுக்கு எடுத்துக்கூற விழைகின்றேன்.

எப்பொழுதும் காலை 4.30 மணிக்கு எழுந்து, 5.00 மணிக்குள் ஸ்ரீ அன்னையின் படத்தின்முன் தீபம், பத்தி ஏற்றி, ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் மந்திரங்களை டேப்பில் போட்டு, தியானம், பிரார்த்தனை முடித்து, பின்னர் காலை 5.50க்கு விஜய் டி.வி.யில் "ஸ்ரீ அன்னையின் பால்கனி தரிசனம்" பார்ப்பது, ஸ்ரீ அன்னையின் மந்திரங்களை மனதால் உச்சரிப்பது அன்றாட வழக்கம்.

பின்னர் என் துணைவியார், ஸ்ரீ அன்னைக்கு புஷ்பாஞ்சலி சேவைக்காக வீட்டுத் தோட்டத்திலுள்ள பூச்செடிகளிலிருந்து பூக்களைப் பறித்து முடித்தபின்னர், வெயில் வருவதற்குள் பூச்செடிகளுக்குத் தண்ணீர் விடுவது வழக்கமான செயல்.

சம்பவத்தன்று (டிசம்பர் 2004) எங்கள் வீட்டில் மின்சாரம் இல்லை. அன்று சிறு தடுமாற்றம். விஜய் டி.வி.யில் "ஸ்ரீ அன்னையின் பால்கனி தரிசனம்" பார்க்க இயலவில்லை. காலையில் தியானத்தை முடித்து சுமார் 6.30 மணிக்கு, என் துணைவியார் பூக்களைப் பறிப்பதற்குச் சென்றார் (ஸ்ரீ அன்னைக்கு புஷ்பாஞ்சலிக்காக விதவிதமான செடிகளை வளர்த்துவருகின்றோம்).

குறிப்பிட்ட தினத்தன்று என் துணைவியார் 1-ஆம், 2-ஆம் செடியை விட்டுவிட்டு, மூன்றாவது செடியிலிருந்து பூக்களைப் பறிக்க ஆரம்பித்தார்கள். நானும் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. சிறிது பூக்களைப் பறிப்பதற்குள்ளாகக் காலனிக்குத் தண்ணீர் திறந்துவிடும் பிளம்பர் அப்பொழுது, "குடிநீர் இணைப்பு திறந்துவிடப்பட்டுள்ளது"என்று கூறி சென்றுவிட்டார் (வாரம் ஒரு முறைதான் குடிநீர் வரும்). 1 மணி நேரத்திற்குள் தண்ணீர் பிடிக்கவேண்டும். எப்பொழுதும் மாலையில்தான் குடிநீர் திறந்துவிடுவார்கள். இன்று ஏன் காலையில் விடுகின்றார்கள் என்று புரியவில்லை. பூக்களைப் பறிப்பதை உடனடியாக நிறுத்திவிட்டு, குடிநீர் பிடிப்பதற்கு என் துணைவியார் செல்லவேண்டி இருந்தது.

தண்ணீர் பிடிக்கும் வேலை காலை 8.30 மணிவரை தொடர்ந்தது. மற்ற வேலைகள் காரணமாக அதன்பின்னர் பூக்களைப் பறிக்கச் செல்லவில்லை. அதே நேரத்தில் எலக்ட்ரீஷியனுக்குத் தகவல் கூறப்பட்டது. அவர் 9.30 மணிக்கு வந்து பார்த்தபொழுது எலக்ட்ரிக் போஸ்ட்டில் இருந்து வரும் சப்ளை ஒயர் (live wire) அறுந்து, முதல், இரண்டாவது பூச்செடியின்மேல் (1-ஆம், 2-ஆம்) விழுந்திருந்ததை கூறி, "சப்ளை தற்போது உள்ளது. எவ்வாறு இதனை கவனிக்காமல்விட்டீர்கள். இந்தச் செடிகளைத் தவறுதலாக (பூக்களைப் பறிக்கத்) தொட்டிருந்தால்கூட மிகப்பெரிய விபரீதம் நிகழ்ந்திருக்கும்"என்றும் கூறினார்.

இதனைச் சொன்னபொழுதுதான் எங்களுக்கு என்ன நடந்துள்ளது என்று புரிந்துகொள்ள முடிந்தது. காலையில் எங்கள் வீட்டிற்கு மாத்திரம் மின்சப்ளை இல்லை. எக்காரணத்தினால் சப்ளையில்லைஎன்பதை நாங்கள் உறுதிபடுத்திக்கொள்ளவில்லை.

சுருக்கமாகக் கூறினால்,

1. *முதல், இரண்டாவது செடிகளிலுள்ள பூக்களைப்பறிக்க முற்பட்டிருந்தால், என் துணைவியாருக்கு விபரீதம்,*
2. *வாட்டர் டியூபில் தண்ணீரை பூச்செடிகளுக்கு ஊற்றியிருந்தாலும் மின்சப்ளை டியூபிலிருந்து செடிகளின்மேல் விழும் தண்ணீர்மூலம் வந்து பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்.*

நாங்கள் அசட்டையாக இருந்த தருணத்தில் ஸ்ரீ அன்னை அவர்கள் எப்படி எங்களைக் காப்பாற்றி உள்ளார்கள்என்பதைச் சுருங்கக் கூறினால்,

1. ***முதல், இரண்டாவது செடிகளிலிருந்து விலகி மூன்றாவது செடியிலிருந்து பூக்களைப் பறித்தது, என் துணைவியார் தம்மை அறியாத செயல்.***

*2. ஒவ்வொரு வாரமும் மாலையில் வரவேண்டிய குடிதண்ணீரை அன்றுமாத்திரம் காலையில் மாற்றி அமைத்துக்கொடுத்து என் துணைவியார் கவனத்தைப் பூக்கள் பறிப்பதை நிறுத்தியதோடு, செடிகளுக்குத் தண்ணீர்விடுவதை நிறுத்தியதற்கும் காரணமாக அமைந்தது.*

நாங்கள் ஸ்ரீ அன்னையையே முழுமையாக நம்பியுள்ளோம். எங்களைக் காப்பாற்றிய ஸ்ரீ அன்னைக்கு எங்கள் ஆத்மார்த்த நன்றியைத் தெரிவித்துப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ அன்னை எப்பொழுதும் நம்முடனே உள்ளார். அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடுவதில்லை. நம்மைவிட்டு விலகுவதுமில்லை. ஸ்ரீ அன்னையின் சக்தியை அறிந்திராத மற்ற அன்பர்களும் இதன்மூலம் ஸ்ரீ அன்னையையும், அவருடைய அளவற்ற கருணையையும் உணரலாம்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் இருப்பதில் செயல்படுவது. திருப்தி நிலையானது, முழுமையானது. இருப்பது நிலையில்லாதது; ஒரு பகுதியாகும். நிலையான, முழுமையான திருப்தியை நிலையில்லாத பகுதியான இருப்பதில் தேடும் மனம் என்றும் அதை அடைய முடியாது.

***நிலையான முழுமையை***

***நிலையில்லாத பகுதியில் மனம் தேடுகிறது.***



# இம்மாதச் செய்தி

# தெம்புதரும் எண்ணம் தெளிவான பிரம்மம்.

# எங்கள் குடும்பம் II

(சென்ற இதழின் தொடர்ச்சி.....)

**பெரியவனுடைய நண்பன் கூறும் புத்திமதி:**

- ✡ பிள்ளை கெட்டுப்போனால் முக்கியக்காரணம் 'சேர்க்கை சரியில்லை' என்பதாகும்.
- ✡ சிறுவயதிலிருந்தே பெரியவர்கள் பிள்ளைகளை மட்டமான குழந்தைகளுடன் விளையாட அனுமதிக்கமாட்டார்கள்.
- ✡ பெரியவர்கள் வீட்டிலிருந்தாலும், பிள்ளைகள்மீது முழுக்கவனமிருக்கும்.
- ✡ வாழ்வில் முன்னுக்குவந்தவர்கள் சிலர் நல்ல நட்பால் முன்னுக்கு வந்தவர்கள்.
- ✡ *நண்பர்கள் கூறுவதை வேதவாக்காக எடுத்துக்கொள்ளும் வயதில் நண்பர்கள் ஒருவர் வாழ்வை நிர்ணயிப்பார்கள்.*
- ✡ *நல்ல நண்பர்களுடைய உறவு தெய்வம் உடனிருந்து காப்பதற்கு ஒப்பாகும்.*
- ✡ நல்ல நண்பர் அமைவது பூர்வஜென்ம புண்ணியம்.
- ✡ எவர் பேச்சையும் ஏற்காதவர்கள் நண்பர் சொல்வதை அப்படியே ஏற்பார்கள்.
- ✡ குரு, தகப்பனார், தலைவர் செய்யும் நல்லதை இனிய நண்பன் செய்வான். அவர்கள் செய்யாததையும் நட்பு செய்யும்.
- ✡ நட்பு நயமானால் நாளெல்லாம் நல்லநாளானதுபோலாகும்.
- ✡ பெரியவனுக்கு பார்ட்னர்ஷிப் தெரிகிறது, பார்ட்னர் தெரியவில்லை, அவர் பண்பு தெரியவில்லை. நண்பன் பார்ட்னரை அறிவான்; அவர் பக்குவத்தை அறிவான்; அதைப் போற்றிப் பாராட்ட பெரியவனுக்குப் பண்பில்லைஎன அறிவான். அதை எடுத்துச்சொன்னான்; இடித்துச் சொன்னான். பெரியவன் ஏற்றுக்கொண்டான். இக்குடும்பத்தில் தாயாரின் பக்திக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ, அவ்வளவு முக்கியத்துவம் நண்பன் அறிவுரைக்குண்டு. *பக்தி நல்லது செய்கிறது; அறிவுரை தவற்றைத் தடுக்கிறது.*

ஆபத்தை விலக்குவதும், அருளை அழைப்பதும் சமம்.

- ✡ கணவருக்கோ, சிறியவனுக்கோ, பெண்ணுக்கோ, அந்த நல்ல வாய்ப்பு அமையவில்லை.
- ✡ *சரியான நேரத்தில் உயர்ந்த சொல்லைச் சொல்வது அசரீரி. அதைக் கேட்டுப் பயன்பெறுவது அருள், அதிர்ஷ்டம்.* காங்கிரஸ் தலைமை 1942-இல் அப்படிப்பட்ட சொல்லை ஸ்ரீ அரவிந்தர் கூறியதைக் கேட்கவில்லை. கேட்டிருந்தால் நாடு பிளவுபட்டிருக்காது.
- ✡ 1943இல் 30 இலட்சம் பேர் பஞ்சத்தில் கல்கத்தாவில் இறந்தனர். வைஸ்ராய் வேவல் வந்து மார்க்கட்டை துரிதப்படுத்தி பஞ்சத்தைப் போக்கினார். அதன் முன்னிருந்த வைஸ்ராய் லின்லித்கோவால் அதைச் செய்ய முடியவில்லை.
- ✡ கடும் சொல்லானாலும், ஒரு சொல், நேரத்தில் ஒருவர் சொல்வதால் குடும்பம் அழிவது தடுக்கப்படுகிறது.
- ✡ ஒரு சொல் - ஓம் - உலகை சிருஷ்டித்தது. ஒரு சொல் உயிரைக் காப்பாற்றும். ஒரு சொல் ஓராயிரம் சொல்லுக்குச் சமம்.

ஒரு சொல்லை அறிந்தவர் வாழ்வில் 'ஓம்'ஐ அறிந்தவர்.

**வேலைக்கார ரங்கன்:**
**900 ரூபாய் சம்பளம் 9,000 ரூபாய் வருமானமாகும்:**
**அன்னைக்குத் திருடனையும், திருட்டையும் பிடிக்கும்:**

- ✡ *மனிதன் அன்னையை ஏற்றால், சத்தியஜீவனாகலாம்* என்ற வாய்ப்பு எழுகிறதுஎன்பது, வாழ்வில் அன்பர் அவருடைய ஸ்தாபனத்

**தலைவராவாரென மாறுகிறது. வேலைக்கார ரங்கன் அன்னையை வழிபட்டால், இந்தக் குடும்பத்தின் நிலைக்கு வருவானென்பது சட்டம்.**

- ✡ **முடியாட்சி, மன்னராட்சி போய் மக்களாட்சி வந்தபின் எவரும் நாட்டை ஆளலாமென்று உரிமை வந்ததுபோல், ஊழியர் தலைவராவார்.**
- ✡ **ரங்கனுக்கு வந்த வாய்ப்பு எல்லா அன்பர்கட்கும் தவறாது வந்தது. பெறுவது அன்பரைப்பொருத்தது.**
- ✡ **நம்மை அன்னை ஏற்கவேண்டும். திருடனை விலக்கவேண்டும்; தண்டிக்கவேண்டுமென நினைப்பது இயல்பு.**
    - ❀ **இது சரியெனக்கொண்டால், அன்னை மகான்களை ஏற்க வேண்டும், பாமரமக்களை விலக்கவேண்டும், தண்டிக்க வேண்டுமென்று சொல்லக்கூடாதா?**
    - ❀ **உலகில் தீமையில்லையென்றால் அன்னை ஏன் எவரையும் விலக்க வேண்டும்?**
    - ❀ **உத்தியோகம் நல்லதொழில், திருடு கெட்டதொழில். அதனால், அன்னை ஒன்றை ஏற்று, மற்றதை விலக்கவேண்டுமென்பதும் சரியாகாது.**
    - ❀ **நம் உத்தியோகம் நமக்குச் சரி; திருடனுக்குத் திருட்டு சரி.**
    - ❀ **நம் தொழிலில் திருடு கலந்துள்ளது. நாம் அதைப் பொருட் படுத்துவது இல்லை.**
    - ❀ **திருடனுடைய தொழிலில் சத்தியம் கலந்துள்ளது. நமக்கு அது தெரிவதில்லை.**
    - ❀ **உயர்ந்தமனிதன், தாழ்ந்தமனிதனென்றிருப்பதைப்போல் தாழ்ந்த ஜீவராசிகள் உள்ளதால், தாழ்ந்த மனிதன் அவற்றைவிட உயர்ந்தவனாயிற்றே; அதனால் அன்னை தாழ்ந்த மனிதனையும் ஏற்கவேண்டும்.**



- ❀ **நம் குழந்தைக்குத் திருட்டுபுத்தியிருப்பதால் வீட்டைவிட்டு நாம் அனுப்புவதில்லை. அன்னை திருடனைத் தம் வீட்டில் வைத்துக் கொள்கிறார்.**
- ❀ **திருடன், 'பெரிய திருடு' வேண்டுமெனப் பிரார்த்தனைசெய்தால் அதுவும் பலிக்கிறது.**
- ❀ **இதனாலெல்லாம் திருடு சரியாகாது.**
- ❀ **சங்கரர் கொள்ளு சாப்பிட்டதால் சிஷ்யர் கொள்ளு சாப்பிட்டார். சங்கரர் உலையிலிருந்த ஆணியை சாப்பிட்டார்; சிஷ்யர் சாப்பிட முடியுமா?**
- ❀ ***மனிதன் கெட்டவனானால் நல்லவனாகவேண்டுமென்பது நம் கொள்கை.***
- ❀ ***மனிதன் கெட்டவனானாலும், நல்லவனானாலும் கெட்டதையும், நல்லதையும்விட்டு - திருவுருமாறி - அன்னையை அடையவேண்டும் என்பது அன்னை கொள்கை.***

**ரங்கனுக்கு நம் அந்தஸ்து வருமென்றால் பெண் ‘அநியாயம்’ என்கிறாள்:**
**எதிர்வீட்டு பாக்டரிப் பையன் எம்.எல்.ஏ. ஆனான்:**
**ரங்கனை ‘நீ மந்திரியாவாய்’என்றால் அவன் மந்திரியாகிவிடுவான் என்றால், நான் அதைச் சொல்லமாட்டேன். அதன்மூலம் எனக்கு நல்லது வருமென்றால் சொல்வேன்:**

- ✡ **ரங்கன் உயர்வானென்பது பெண்ணுக்கு இயல்பாக அநியாயமென்று தோன்றுகிறது.**
    - ❀ **அவளே பார்த்தது எதிர்வீட்டுப் பையன் எம்.எல்.ஏ. ஆனது.**
    - ❀ ***யார், எதுவாகிறார்களென்பது நம் கையிலில்லை.***
    - ❀ **இருந்தால் நாம் கொடுக்கமாட்டோமென்ற நினைவை இது காட்டுகிறது.**

- ❀ *இருந்தால் கொடுக்கமாட்டேன்என்பவருக்கு அன்னை எதுவும் தரமுடியாது.*
- ❀ ஆயிரம்பேருக்குக் கொடுப்பேன்; ஆனால், எதிரிக்குத் தர மாட்டேன்என்பதே அன்னை ஏற்கமுடியாத மனநிலை. *எதிரிக்குத்தான் முக்கியமாகத் தரவேண்டும்என்பது அன்னை நிபந்தனை.*
- ❀ அன்னை நிபந்தனைகட்குப் பின்னுள்ள ஆன்மீக விளக்கமென்ன?
- ❀ இடம் காலியாகாமல் உள்ளே வரமுடியாது என்பது physical law ஜடமான சட்டம்.
- ❀ *கொடுக்கும் மனம், எதிரிக்கும் கொடுக்கும் மனம் கண்டத்தை அகண்டமாக்குகிறது. அகண்டம் வெளிப்பட்டால், அகண்டம் உள்ளே வருகிறதுஎன்பது விளக்கம்.*

✡ 'நான் சொன்னால் ரங்கன் உயர்வான்என்றால் சொல்லுவேன்' என்பதற்குப்பதிலாகச் 'சொல்லமாட்டேன்'என்கிறான் பெரியவன். 'எனக்கு நல்லதுவரும்என்றாலும் ரங்கன் உயர்வதை நான் பொறுக்க முடியாது'என்பவளைவிடப் பெரியவன் தேவலை.

- ❀ பெறுவது சலனம்.
- ❀ *அதிகமாகப் பெறுவது கண்டம் அகண்டமாவதால்.*
- ❀ *இந்த நல்ல எண்ணங்கள் finiteயை Infiniteஆக மாற்றக் கூடியவை.*
- ❀ *நம் எண்ணங்கள் நாம் யார்என்பதைக் காட்டுகின்றன.*
- ❀ *சுமுகம் வேண்டும்என்பவர் சத்தியஜீவியத்திற்குரியவர்.*
- ❀ பிணக்கை வளர்ப்பவர் vital உணர்வில் வாழ்பவர்.
- ❀ குடும்பம் மேலே போகும்பொழுது மனம் குறுகியதாக இருந்தால் தடையாகும்.
- ❀ *மனம் நம் கையில் உள்ளது. எப்படியும் மாற்றலாம். உடனேயும் மாற்றலாம்.*



- ❀ 'மனம் என் கையிலில்லை'என்பவன் vital person மனத்திற்கு உட்பட்ட விலங்குமனிதன்.
- ❀ 'நமக்கு பாக்டரி வருவது சரி. ரங்கனுக்கு நம் அந்தஸ்து வருவது சரியன்று'என நினைக்கலாம். அதனால் பாக்டரிதான் வாராமற் போகுமேதவிர ரங்கனுக்கு வருவது நிற்காது.
- ❀ தாய்மாமன் காலில்விழுந்து நமஸ்காரம் செய்தவனை, ''செய்யாதே, இதனால் உனக்கு ஏதாவது நல்லது நடந்து விட்டால் என்ன செய்வது''என்ற தாய்மாமன் எத்தனை வருஷம் அன்னையை வணங்கினாலும் அது சாமிகும்பிடுவது போல் இருக்குமேதவிர அன்னையை ஏற்பதாகாது.

**மனிதன்என்றால் குறையுடையவன்:**

✡ *இது உண்மை. நிறைவுடைய பகுதியும் மனிதனில் உள்ளது.*

✡ *சமர்ப்பணம் ஆளும் பகுதியில் குறையிருக்காது. Man is always rightஎன அப்பகுதியைக் கூறலாம்.*

✡ நாட்டுத்தலைவர்கள் சாப்பாட்டை வேளைக்கு வேளை சோதனை செய்வார்கள். எந்த நேரமும் விஷம் கலந்திருக்கும்.

✡ நாம் சாப்பிடும் சாப்பாட்டில் அக்குறை வர வழியேயில்லை.

✡ சர்க்கரைவியாதி, பிளட் பிரஷர், ஆஸ்துமா, அலர்ஜிபோன்ற வியாதி உள்ளவர்கள் இஷ்டப்படி சாப்பிடமுடியாது. கவனித்துச் சாப்பிட வேண்டும். நல்ல உடல்நலம் உள்ளவர்க்கு அப்பிரச்சினை இல்லை. அவர் எதைவேண்டுமானாலும் சாப்பிடலாம்.

✡ பலரிடமும் கடன்வாங்கியவருக்கு எந்த நேரமும் கடன்காரன் தொந்தரவு வரலாம். கடனேவாங்காதவர் வாழ்வில் அப்பிரச்சினை இருக்காது.

✡ கடன்படாதவர், வியாதியில்லாத ஆரோக்கியமானவர், எதிரிகள் இல்லாமல் வாழ்பவருக்கு மேற்சொன்ன பிரச்சினைகள் இல்லை.

- ✡ வாழ்வில், வாழ்வுக்குட்பட்டு, சமூகத்தைஒட்டி வாழ்பவருக்கு எந்த நேரமும் ஏதாவது பிரச்சினை வரும். He is always rightஎன்று அவரைக் கூறமுடியாது.
- ✡ *வாழ்வை விட்டகன்று, வாழ்க்கைக்குட்படாமல், சமூகத்தைஒட்டி வாழாமலிருப்பவருக்கு He is always right அவருக்குத் தப்பில்லைஎன்ற நிலையுண்டு.* அதை அன்பர்கள் அறிவதில்லை. அப்படி ஒரு விஷயமிருப்பதாகத் தெரிந்தால் மேற்சொன்ன நிபந்தனைகளை ஏற்காமல் I am always right நான் செய்வதெல்லாம் சரிஎன தம்மிஷ்டப்படி நடக்க ஆரம்பித்துவிடுவார்கள்.
- ✡ பிறந்த குழந்தை 10 வயதானால்தான் நிலைஎன்ற காலம் மாறிவருகிறது. காலம் மாறும்பொழுது failure தவறுதல் குறைந்து வருகிறது. சில இடங்களில் failure தவறுவதில்லைஎன்றும் ஏற்பட்டுள்ளது. பரீட்சைஎன்றால் failure உண்டுஎன்பது பிரபலமான பள்ளிகளில் ஆரம்பநாட்களிலிருந்ததில்லை. ரயில் லேட்டாகவும் வரும்என்பது ஐரோப்பாவிலில்லை. புத்தகம் பிரசுரித்தால் விற்கும்; விற்காமலுமிருக்கும்என்பது பிரபலமான ஆசிரியர்கட்கில்லை. Failure தவறுதல், குறை எத்தனையோ இடங்களில் குறைந்துவருகிறது. முழுவதும் குறை, தவறுதலில்லைஎன்ற இடங்களுக்கு ஓரிரு உதாரணம் எழுதினேன். நமக்குப் பழக்கமான விஷயங்கள் - நம் வீட்டுச் சாப்பாடு - நாம் கவனிப்பதில்லை. 600 தென்னம்பிள்ளை நட்டவருக்கு 480 செத்துவிட்டதுஎனக் கேள்விப்பட்டவர், எங்கள் ஊரில் ஒரு பிள்ளை இறந்துவிட்டால் ஆயிரம் கேள்விவரும்என்றார். சுற்றுலாவிற்கு 75 பேர் போனால் எத்தனை பேர் திரும்பிவந்தார்கள் எனக் கேட்பதில்லை.

நாமறிந்த வாழ்விலும் குறையற்ற முழுமை இருப்பதை
நாம் காண்பதில்லை.

*சமர்ப்பணம் செய்யப்பட்ட வாழ்வு குறையற்ற முழுமையுடையது.*

*அப்படிப்பட்டவரை He is always rightஎன்று கூறலாம்.*



*மனிதன் குறையுடையவன்; அன்பன் குறையற்றவன்.*

**பெண்ணின் தோழியின் அக்கா வாழ்வு மலர்கிறது:**

- ✡ வாழ்வு தவறுவது வாழ்வின் போக்கு. அது ஏராளம்.
- ✡ வாழ்க்கை, தன்னைச் செப்பனிடத் தவறுகிறது.
- ✡ மரம் சிலையாகச் செதுக்கப்படவேண்டும்.
- ✡ *செதுக்கப்படுவதும், சிதையும் மரமும் சிலையை உற்பத்திசெய்வதுபோல் வாழ்வு தன்னைச் செதுக்கிக் குடும்பவாழ்வை உற்பத்தி செய்கிறது.*
- ✡ *கல் சிதையாமல் சிலையில்லை.*
- ✡ மனிதன் இடறிவிழுகிறான், சண்டைபோடுகிறான், பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறான். இதனாலெல்லாம் குடும்பம் உற்பத்தியாகிறது. *இன்று நாம் குடும்பத்தில் கடமையைச் செய்கிறோம்என்றால் முன்னாளில் பலதலைமுறைகளில் கடமையை நம் முன்னோர் தவறி, பிறகு கடமையின் அவசியத்தை அறிந்தனர்.*
- ✡ *ஒரு பெண்ணைக் கணவன் கைவிட்டுப்போகிறான்என்றால், அவனுடைய வருங்காலத் தலைமுறைகள் அக்கடமையைக் கற்கும் பாதை அது.* அதைத் தடுக்கமுடியுமா?
  - ❀ தடுத்தால் கடமையைஎப்படி வருங்காலம் அறியும்?
  - ❀ அப்படித் தடுத்தால், கொஞ்சநாளில் மீண்டும் அக்குறை வெளி வரும்.
- ✡ பையன் பெயிலானால், அடுத்த வருஷம் நன்றாகப் படிப்பான். அவனுக்குப் பாஸ்போட்டால், அடுத்த வருஷம் அவனால் படிக்கவே முடியாது. பாஸ்போடுவது நல்லதா? அவனுக்கு நல்லதைச் செய்யுமா?
- ✡ *அன்னைக்குப் பிரார்த்தனைசெய்தால் பாஸாகிறதே.* ஏன் அன்னை அதைச்செய்கிறார்?

- ❀ *பிரார்த்தனை நம்பிக்கையால் வருகிறது.*
- ❀ *நம்பிக்கை அறிவைவிட உயர்ந்தது.*
- ❀ நம்பிக்கை பிறந்தபிறகு பெயிலானால் நம்பிக்கை போய்விடும்.
- ❀ நம்பிக்கையால் அறிவு வந்தபிறகு அடுத்த வருஷம் அவனால் நன்றாகப் படிக்கமுடியும்.
- ❀ *அனைவரும் அறிவால் பெறுவதை இவன் நம்பிக்கையால் பெறுகிறான்என்பது உயர்ந்தது.*
- ❀ பெண்ணின் நம்பிக்கைக்குத் தோழியின் அக்கா வாழ்வு எதிரொலியாகச் செயல்படுவது பெண்ணுக்கு அருளுண்டுஎனத் தெரிகிறது.

✡ *அன்னை எதைச்செய்தாலும், எந்த முறையாகச் செய்தாலும் அதில் தவறு இருக்காது. அது அன்னை செய்வதால் உயர்ந்துவிடும்; உயர்ந்ததாக இருக்கும்.*

- ❀ அதை அறிபவன் அன்பன்.

**காரியம் கூடிவருவது நாம் அன்னையை ஏற்பது:**
**காரியம் கூடிவாராதது நாம் அன்னையை ஏற்க மறுப்பது அல்லது ஏற்கமுடியாதது:**

✡ *இப்படி, காரியத்தை அறிவது யோகக்கண்ணோட்டம்.*

✡ நாம் ஒருவருடன் தொடர்புகொண்டவுடன், அவர்கள் வேலை ஆட்டம்காண்கிறதுஎன்றால் என்ன அர்த்தம்?

✡ அன்னையின் புதிய சிருஷ்டியாக இவர் வேலைபெற்றவர்எனில், நாம் அதற்கு எதிரானவர்எனப் பொருள்.

✡ நமக்கு அன்னையின் புதிய சிருஷ்டி ஒத்துவரவில்லை. மனம் பழமையை conservation நாடுகிறதுஎன்று பொருள்.



✡ அவர் மனத்தில் இந்த உண்மைபடுமானால், அதை அவர் ஏற்று மாறி - திருவுருமாறி - செயல்படுவாரானால், அவர் பக்தராகலாம்.

✡ *சத்தியஜீவியம் எங்குச் செயல்பட்டாலும் அங்குள்ள நிலைமையை அனுசரித்துச் செயல்படவேண்டும்.*

- ❀ நாடு அடிமையாக இருக்கும்பொழுது சத்தியஜீவியம் சுதந்திரம் பெற்றுத்தருகிறது.
- ❀ நாடு பிளவுபட்டிருக்கும்பொழுது முதற்காரியம் நாடு ஒன்றுபட வேண்டியது.
- ❀ நாட்டில் வறுமையிருக்கிறதுஎனில் வறுமை நீங்கவேண்டும்.
- ❀ மனிதன் சோம்பேறி, வேலை செய்யப் பிரியப்படாதவன், அன்னையை நாடிவந்தால், வேலை செய்யாமல் சாப்பிட வேண்டும்என்பான். அவன்முன் அன்னைசக்தி - 1956 பிப்ரவரி 29இல் பொன்னொளி விழுங்கப்பட்டதுபோல் - பின்வாங்கும். அவன் உட்கார்ந்து சாப்பிடுவான். அவனுக்கு வெட்கம் வாராது. சக்தி தலைவணங்குமேதவிர அன்னைசக்தி அவனுக்கு வெட்கம் தர இயலாது; அவனை வேலை செய்யவைக்கும் திறன் அதற்கில்லை.
- ❀ அதுபோன்ற இடம், அதே இடமில்லாவிட்டாலும், அனைவரிடமும் உண்டு. அதை நம்மிடம் காண்பது அறிவு.
- ❀ இக்கதையில் தாயாரிடம் நாம் கண்டால் நல்லது.
- ❀ அன்னைசக்தி குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு வேண்டும்என அவர் நினைப்பது அதுபோன்ற வெட்கம்கெட்ட செயல். அதுவே அவருக்கு அருளைப் பெற்றுத்தருகிறது.
- ❀ தாயாரால் அந்த எண்ணத்தைச் சமர்ப்பணம்செய்ய முடியவில்லை.
- ❀ நம்மால் எந்த இடத்தில் சமர்ப்பணம்செய்ய முடியவில்லைஎன நாம் பார்த்தால் எதையும் சமர்ப்பணம்செய்ய முடியவில்லைஎனத் தெரியும்.

**நீ எப்பொழுது போனாலும் கேட்டைத் திறந்துபோட்டுவிடுவாய்; போன் பேசினால் ரிஸீவரை மீண்டும் சரியாக வைப்பதில்லை; மேஜை ஒழுங்கீனமாக இருக்கும்; இவையெல்லாம் சரியில்லாமல் சமர்ப்பணம் ஆரம்பிக்க முடியாது :**

- ✡ **தோழியின் அக்கா பிரச்சினையைச் சமர்ப்பணம்செய்ய முடிவு செய்தவுடன், அவள் பிரச்சினை தீர்ந்துபோனதைக் கண்ட பெண் சமர்ப்பணத்தை மேற்கொள்ள முடிவுசெய்து தாயாரைக் கேட்கிறாள். தாயார் மேற்கண்ட பதிலைக் கூறுகிறார்.**
- ✡ ***சமர்ப்பணம் மிகசக்திவாய்ந்தது. அதனால் அதை எளிதில் ஆரம்பிக்க முடியாது.***
- ✡ ***சமர்ப்பணம் சரணாகதியில் முடியும். பிரம்மம் தன் நிலையை விட்டிறங்கி வந்து - அதைச் சரணம்செய்து - உலகைச் சிருஷ்டித்தது. நாம் மீண்டும் பிரம்மத்தையடைய அதே உபாயத்தை - சரணாகதியை - மேற்கொள்கிறோம். எனவே சரணாகதி***
  - ❀ *உலகை சிருஷ்டித்த சக்தி;*
  - ❀ *மனிதன் பிரம்மமாகும் சக்தி;*
  - ❀ *சிருஷ்டியில் அதிகபட்ச சக்தியுள்ள கருவி.*
- ✡ ***The Life Divineஇல் ஓர் அத்தியாயம் நன்றாகப் புரிந்தபின், அதன் கருத்துகளை மனத்தில் வரிசையாகக் கொண்டுவரலாம். மனப்பாடமாகச் செய்தால் புரியாது; ஜீவனிருக்காது. வேகமாகச் சொல்லலாம்; பயன் தாராது. முதல் கருத்தை நினைத்தவுடன் அடுத்தது நினைவுவந்தால் முதல் கருத்துப் புரிகிறதுஎன்று பொருள். அப்படி எல்லாக்கருத்துகளும் வரிசையாகத் தாமே தம்மை நினைவுபடுத்தினால் அவை நமக்குப் புரிகின்றனஎனக்கொள்ளலாம். அப்படி நினைவுகூறுவது ஒளிமயமாக உள்ளே தெரியும். அது ஒளிப்பிழம்பாக, ஒளிவெள்ளமாக நம் ஜீவனைப் பிளந்து ஊடுருவுவதைக் காணலாம். அந்த அனுபவம் சற்றுநேரமே இருக்கும். அனுபவம் அதற்குமேல் தொடர்ந்தால் ஒளி பொன்னொளி ஆகும். பொன்னொளி ஸ்ரீ அரவிந்தராகும். இவ்வனுபவம் பெற்றவர் அதன்பிறகு எதைப் படித்தாலும் பொன்னிறப்பொறிகள் எழுத்தில் இங்கும், அங்குமாகத் தெரியும். வருஷக்கணக்காக ஓர் அத்தியாயத்தில் ஊன்றி இப்பலனைப் பெறலாம்.***
- ✡ **ஓர் அத்தியாயத்தில் பெற்ற பலனை அடுத்த அத்தியாயத்தில் பெற 10 ஆண்டுகட்குப்பதிலாக 7, 8 ஆண்டுகளில் பெறலாம். பக்குவம் இருந்தால் ஓரிரு ஆண்டுகளிலும் பெறலாம்.** ***அத்தியாயத்தைத் தொடங்கும்முன் சமர்ப்பணத்தை மேற்கொண்டால், சமர்ப்பணம் செயல்பட்டால், படிக்கும் முயற்சி சமர்ப்பணமானால்,***

  **அன்றே அவ்வனுபவம் அடுத்த அத்தியாயத்தில் கிடைக்கும்.**
- ✡ ***56 அத்தியாயங்களும் சமர்ப்பணத்தால் தங்கள் ஆன்மீகச் சத்தியத்தை (reveal) வெளிப்படுத்தினால், நூல் முழுவதும் - ஸ்ரீ அரவிந்தம் - அன்பருக்கு மொத்தமாக, ஞானமாக மனத்திரையில் எழும். அது பகவான் ஸ்ரீ அரவிந்தரின் பொன்மயமான உருவமாகும்.***
- ✡ ***சமர்ப்பணம் பெரியது, முடிவானது, முழுமையானது, முக்கியமானது.***

**கணவருக்கு ஒரு வருஷம் லீவு உரிமையாக வருகிறது:**
**பெண் அம்மா சொல்வதைச் செய்ய முயன்றால் எரிச்சல் வருகிறதுஎன்று கண்டாள்:**
**தாம் போனைச் சரியாக வைப்பதில்லைஎனப் பார்த்தாள்:**

- ✡ **கணவருக்கு லீவு உரிமையுடன் வருவதன் அர்த்தம் விளங்கவில்லை. சௌகரியமாகப்பட்டது.**
- ✡ **மனிதனுக்குப் பெறுவது தெரிகிறது. கொடுப்பவர் தெரியவில்லை. சூட்சுமத்தில் குருடு. காரணமும் புரிவதில்லை.**
- ✡ **பெண் நல்லவள், அடக்கமானவள். அம்மா சொல்வனவெல்லாம் நன்றாக இருப்பதால் செய்யலாம்என ஆசைப்பட்டாள். போனைக்கூடச்**

சரியாக வைக்கத் தெரியாத பெண். உடலுக்கு அடிப்படையான பயிற்சியில்லை. அவள்எப்படி ஆத்மாவுக்குப் பயிற்சி தரமுடியும்?

✡ எதற்குமே இலாயக்கில்லாத பெண் முடிவான கட்டுப்பாட்டை ஏற்க முயல்வது

1) அடக்கமானவள்என்பதாலும்;

2) வீட்டின் சூழல் அன்னைச்சூழல்என்பதாலுமாகும்.

✡ போனில் நெடுநாள் பழக்கமுள்ளவரும், எதையும் அழகாகச் செய்யும் பாங்குள்ளவரும், சமர்ப்பணம் செய்யக்கூடியவரும் போனை அழகாகப் பொருத்தமாக வைப்பார்கள். இது எதுவும் இல்லாத பெண்.

✡ போனைப் பொருத்தமாகத் திரும்பவைப்பதுஎன்பது அச்செயலுக்குரிய ரூபம் (form). ரூபம் சரியாக இருந்தால் force பாவம் சரியாக இருக்கும். ரூபமும், பாவமும் சரியாக இருந்தால் அவை எழும் உற்பத்தி ஸ்தானமான (spiritual determinants) எட்டு அம்சங்கள் சரியாக இருக்கும். அவை புருஷத்தொடர்புள்ளவைஎன்பது ஆன்மீக விளக்கம். சரியாக வைக்கவில்லைஎன்றால் சைக்கிளில் ரோட்டில் போகச்சொன்னால், தார்போட்ட இடத்தில் சைக்கிளை ஓட்டினால் சரியாக வரும்; தார்போடாத மண்ணில் ஓட்டினால் சைக்கிள் சரியாக ஓடாது. சைக்கிளைத் தார்ரோட்டில் ஓட்டவேண்டும்எனத் தெரியாதவன் அல்லது ஓட்டமுடியாதவன் சைக்கிளுக்குப் புதியவன். இப்பெண் போனுக்குப் புதியவள்என்பது மட்டுமன்று,

❀ ஒழுங்கான செயல் பயிலாதவள்.

❀ உடலுக்குச் செயலுக்குரிய ரூபம் வரவில்லை.

❀ அவளுக்கு ஆதாயமனப்பான்மை இருப்பதும், போனைச் சரியாக வைக்காததும் ஒரே அம்சமாகும்.

❀ தாயார் ஒரு கோடிஎனில் பெண் எதிர்பக்கத்துக் கோடியாகும்.

❀ பெண் தாயாரைப்போல இருப்பாள்எனில் அடக்கமாக இருக்கிறாள். தாயாருடைய ஆன்மீகத்திறன் வரவில்லை. மனம், உயிர் தாண்டி தாயாருடைய உடலுக்குரிய திறன் (skills) வரவில்லை. கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆசைப்படும் வயதில் புத்தகம் நேராக இருக்கிறதா, தலைகீழே இருக்கிறதாஎன்று புரியவில்லைஎனில் எழுத்துப் (ஆனா, ஆவன்னா) பயிலவில்லை என்று நாம் அறிகிறோம்.



✡ தியானத்தில் பெண் எரிச்சல்படுகிறாள். *அவளுடைய எரிச்சலும், பெரியவனுடைய குதர்க்கமும், கணவருடைய கடுமையும் வறுமையின் சுவடுகள்.*

**பெரியவன் அரசியல் கூட்டத்திற்குத் தலைமைதாங்கினான்: மந்திரி ரங்கனைக் கவனித்தார்:**

✡ *மிகச்சிறிய நல்லதற்கும் பெரும்பலன் வரும் சூழல் பூமியில் உள்ளது என்கிறார் அன்னை.*

✡ ரங்கனைப்பற்றி பேசினார்கள். மந்திரி அவனைத்தேடி வந்துவிட்டார்.

✡ பெண் நல்லவார்த்தைப் பேசப் பயப்படுகிறாள்.

✡ பெரியவனுக்குத் தாங்கவில்லை. ஏதாவது நடந்துவிடப்போகிறதுஎனப் பயப்படுகிறான்.

❀ *அப்படி பயம் எழுவது ஆழ்மனத்தில் subconscious.*

❀ *அதற்கு வீச்சும், சக்தியும் அதிகம்.*

❀ *அதனால் அது உடனே பலிக்கும்.*

✡ தாயார்தவிர வீட்டில் பெண்ணுக்குத்தான் நல்லமனம். அவளுக்கே மனம் தயங்குகிறது. அது வீட்டின் மனநிலையைக்காட்டுகிறது.

✡ நாடு முன்னேறும் நேரம் – இன்று நமக்கு அப்படிப்பட்ட நேரம் – இன்று டிரைவராக இருந்தவன், நாளை பெரிய குபேரனாகிறான். கவனித்தால் எல்லாத்தொழில்களிலும் அதுபோல் இளைஞர்கள் திடீர், திடீரென உச்சக்கட்டத்திற்கு உயர்ந்துவிடுகிறார்கள். பணம், பதவி,

படிப்பு, பாராட்டு, பிரபலம் ஆகியவை பெருகிவருகின்றன. *The collective subconscious is mature and confers boons. சமூகம் ஆழ்ந்துணர்ந்து வாடி வதங்கிய உள்ளங்களை உயர்த்தக் கங்கணம் கட்டிக்கொண்டு அவர்களில் யாராவது ஏதாவது முயற்சி எடுக்க மாட்டார்களாஎனக் காத்திருக்கிறது.*

- ❀ *மேல்லோகத்தில் பெரிய ஆத்மாக்கள் தகுந்த கருவுக்காகக் காத்திருப்பது ஆன்மாவின் வளர்ச்சி.*
- ❀ *அதன் பிரதிபலிப்பு சுபிட்சம்.*
- ❀ ரங்கன் பெரிய குடும்பத்தில் பிறந்தவன்என்பதால் அவனுக்கு இயல்பாக உயர்ந்த குணங்களுண்டு.
- ❀ *பொறாமைப்படுவதற்குப்பதிலாக என்ன நடக்கிறதுஎன அறிய முயலவேண்டும்.*
  - ☆ *அது தெரிந்தால், நாம் அதைக் கற்க முன்வரவேண்டும்.*
  - ☆ *அது நம் ஆழ்மனத்தை அடைந்தால் சமூகம் இன்று மக்களுக்குச் செய்வதை நாமே செய்யலாம். நாம் சமூகத்தில் அதிர்ஷ்டத்தின் கருவியாக இருக்கலாம்.*
  - ☆ *நாம் அன்னைக்கு அருளின் கருவியாகலாம்.*
  - ☆ *நாம் பெறும் அருள் நம்முள் பேரருளானால் நாம் அருளின் கருவியாகலாம்.*
  - ☆ *திறமையில் நம்பிக்கை போனால் அருள் பேரருளாகும்.*

பெண் தன் முடிவைச் சமர்ப்பணம் செய்தாள்;
அது சமர்ப்பணமாயிற்று:
மனம் மலைபோலக் கனத்தது; இன்பமாகக் கனத்தது:
அண்ணன், தம்பி, அப்பா, பார்ட்னர் பெண்ணுடன் பிரியமாக நெடுநேரம் பேசினர்:
பால்பாயிண்ட்பேனா எழுதாதது எரிச்சல்படாமலிருந்தபொழுது நன்றாக எழுதியது:



குழந்தை வாயில் மாட்டிக்கொண்ட பொருள் தானே வெளி வந்துவிட்டது:
உடல் கனத்தது; உடல் லேசாயிற்று:

- ✡ ரங்கன் விஷயத்தில் மனம் மட்டமாக இருப்பதைப் பெண் அறிந்து மாற முடிவுசெய்து முடிவு சமர்ப்பணமானதில் அனைவரும் இதுவரை இல்லாததுபோல் பிரியமாகப் பேசியது, பேனா, குழந்தை விஷயம் பெண்ணைப் புது மனுஷியாக்கியபோதிலும், எண்ணம் சமர்ப்பணம் ஆனதால் இந்த மாறுதல்என்று பெண்ணுக்குத் தெரியவில்லை.
- ✡ *இது திருவுருமாறும் சமர்ப்பணம். பலன் கருதிய சமர்ப்பணமில்லை. பலன் மனத்திற்குரியது. Psychological growth. இருந்தும் இது unconscious தானறியாத சமர்ப்பணம். தானறியும் சமர்ப்பணமும், சரணாகதியும் இதைக் கடந்தவை.*
- ✡ வாழ்வில் தம்மை மறந்த இன்பம் ஒரு முறையும் அறியாதவர் ஏராளம். அண்ணனுக்கும், தம்பிக்கும் வீட்டில் ஒரு பெண்ணிருப்பது நினைவு வருவதில்லை. பார்த்தால்தான் நினைவுவரும். பார்ட்னர் எப்பொழுதும் மரியாதையாக, பிரியமாகப் பேசுவார். இம்முறை போனில் பிரியமாக, மரியாதையுடன் போனை வைக்கமுடியாதபடிப் பேசினார். கை, கால், முகம் வசதியானவர்க்குச் செழிப்பாகவும், இல்லாதவர்க்கு வறண்டும் இருக்கும். வறண்டதோல் செழிப்பாக உடனே மாறாது. அதற்கு வசதியுடன் சந்தோஷமும் வரவேண்டும். பெண்ணிடம் காணும் மாறுதல் அத்தகையது. செல்வச்செழிப்பு coarse உடல் எடை கூடியதுபோன்றது. ஆன்மீகச்செழிப்பு பொலிவானது. செழிப்பு,
  - ❀ நன்கு சாப்பிட்டு வந்தால் எடை அதிகரிக்கும்.
  - ❀ சந்தோஷமும் சேர்ந்தால், பளபளக்கும்.
  - ❀ படிப்பாலும், பண்பாலும் வருவதானால் பளபளப்புக்கு உயர்விருக்கும்.
  - ❀ *ஆன்மவிழிப்பால் வருவதானால் பொலிவுக்கு சக்தியுள்ள கம்பீரம் தெரியும்.*

❀ பெண் சற்றுநேரம் பெற்ற பொலிவு அதுபோன்றது.

❀ *மட்டமான மனம் தன் முடிவால் உயர்வது, வளரும் ஆன்மா வெளிப்படுவது — திருவுருமாற்றம்.*

✡ பால்பாயிண்ட் பேனாவில் இங்க் வருவதும், வாராததும் நம் கையிலில்லை. நம் நாட்டுப் பேனாவில் 10இல் 7 பேனாவில் வரவில்லைஎன்றால் பிறகு இங்க் வாராது. வெளிநாட்டுப் பேனாவில் 100இல் 99 பேனா தடையின்றி எழுதும். எதுவும் நம் கையிலில்லை. சமர்ப்பணத்தால் பேனா தவறாமல் நல்ல முறையில் எழுதும். அது சமர்ப்பணம் ஜடத்தை அசைப்பதாகும்.

✡ குழந்தை வாயில் அடைபட்ட பொருளில் விஷயம் எப்படியுமிருக்கும். சமர்ப்பணம் குழந்தையை அசைத்ததா, பொருளை அசைத்ததாஎன்று நமக்குத் தெரியாது. விவரமாகக் கவனித்தால் அது புரியும். சமர்ப்பணம் பலன் தந்தது உண்மை.

❀ குழந்தை பெண்ணின் சமர்ப்பணத்தால் தன்னைக் காப்பாற்றி இருந்தால் அது உயிருடைய உணர்வு (Vital life response).

❀ பொருள் சமர்ப்பணத்தைக் கேட்டு வெளிவந்திருந்தால், அது (Matter's response) ஜடம் சமர்ப்பணத்திற்கு அளித்த பதில்.

இனி உள்ளே வேலையிருப்பதையும், அது மிகக்கடினமானது என்பதையும் பெண் புரிந்துகொண்டாள். அம்மாமீது இதுவரை இல்லாத பாசம்எழுந்தது. அன்னை, நெஞ்சை நிரப்பியவர்கள், அதையும்கடந்து பரவுவதை ஆனந்தமாக உணர்ந்தாள். மனமும், உடலும் கரைந்தன. உடல் லேசாகிக் காற்றில் பறப்பதுபோலிருந்தது. என்னஎன்று புரியவில்லை. கனப்பதும், லேசாக இருப்பதும் இன்பமான உணர்வுகள்எனத் திட்டவட்டமாகப் புரிந்தது:

✡ பெண் பெற்றது ஆன்மீக அனுபவம். சைத்தியப்புருஷன் தரும் அனுபவம்.



✡ *எரிச்சல்படாமலிருப்பது (non-reaction, equality) மிகக்கடினம்என்று புரிவது (subtle knowledge) சூட்சும ஞானம்.*

✡ அம்மாமீது இதுவரையில்லாத பாசம்எழுவது தாய்ப்பாசம் ஆன்மீக மெருகுபெறுவதாகும்.

✡ *நெஞ்சு நிரம்புவது உணர்வு நிறைவது. அதையும்கடந்து ஆனந்தமாகப் பரவுவது ஆன்மீகச்சூழல் ஜீவனில் பரவுவதாகும் (spiritual atmosphere spreading all over the being).*

✡ *மனமும், உடலும் கரைவது அவற்றிலுள்ள தமஸ் கரைவது.*

✡ *உடல் கனப்பது உடலை ஆன்மா நிரப்புவது.*

✡ உடல் லேசாவது, கனத்தவுடல் கனத்தைக் கிரஹித்துக்கொண்டது.

✡ *என்னஎன்று புரியாதது மனம் வேலை செய்யவில்லைஎன்பது.*

✡ *கனத்தாலும், லேசானாலும், ஆன்மாவின் செயல்என்பதால் இன்பமாக இருக்கின்றது.*

✡ இவையெல்லாம் பெரிய மாற்றங்களானாலும், சுபாவத்தை அந்த நேரம் கடந்து வேலை செய்யுமென்றாலும், சுபாவத்தை மாற்றும் திறனுடையவையில்லை. பெண்ணின் ஆதாயமனப்பான்மையை இவை தொடக்கூடியவையில்லை.

✡ பெண் அடக்கமானவள், நல்லவள். பெரியவன்போல் குதர்க்கமில்லை. சிறியவன்போல் எதையும் அறியாதவளில்லை. தகப்பனார்போல சொத்தையில்லைஎன்பதால் இந்த ஆன்மீக அனுபவங்கள் ஏற்படுகின்றன. இவை மற்றவர்க்குக் கிடைக்கவில்லை.

✡ இந்த அனுபவம் ஏற்பட்டபின் ரங்கனைப்பற்றிப் பொறாமையாகப் பெண்ணால் நினைக்கமுடியாது. இந்த அனுபவம் உள்ளபொழுது நிச்சயமாக நினைக்கமுடியாது. அந்த மாற்றம் தற்காலிகமானது என்றாலும் திருவுருமாற்றம்.

✡ *உள்ளே வேலையிருக்கிறதுஎன்று தெரிவது அகம்என்றொரு இடம் இருப்பது தெரிவது.*

✡ நமக்கு அப்படியொரு இடம் உண்டு, அது உள்ளேயிருக்கிறதுஎனத் தெரியாது.

✡ *அகத்தை அறிவது அனைத்தையும் அறிவது.*

✡ *அகத்தை அறிவது ஆண்டவனை அறிவது.*

✡ பெண்ணில் ஏற்பட்ட மாற்றம், அடக்கமும், நல்ல குணமுமிருந்தால் வீட்டில் மற்றவர்களில் என்ன மாற்றம் வரமுடியும்எனக் காட்டுகிறது.

✡ *'உள்ளே வேலையிருக்கிறது'என்ற கருத்து உயர்ந்த ஆன்மீக உண்மை.*

✡ பெண் தாயார்போலிருப்பதால், முதல் நல்ல மாற்றங்கள் பெண்ணில் தெரிகின்றன.

தம்பி மனைவிக்குக் கான்சர்; தாயார் அதை நம்பவில்லை:
தம்பியைப் பிரார்த்திக்கச் சொன்னார்:
தம்பி மனைவியிடமிருந்து அது தவறான செய்திஎனத் தகவல் வந்தது:

✡ என்ன வந்தது, ஏன் வந்தது, என்ன ஆயிற்று, எப்படிப் போயிற்று என்ற ஆராய்ச்சி முழுப்பலன் தரும்என்றாலும், எதையும் அந்த விஷயம் சூழலிலிருக்கும்பொழுது பேசக்கூடாது.

✡ *விஷயம் சூழலிலிருந்தால் நாம் பேசுவது அதற்கு உயிரளிக்கும்என்பது சூட்சுமச்சட்டம்.*

✡ பல ஆண்டுகள், பல மாதங்கள்என்பது கணக்கில்லை. சூட்சுமச் சூழலிலிருந்து விஷயம் விலகியபின் பேசலாம். அதற்குமுன் பேசக் கூடாது.

✡ *தரித்திரம், அதிர்ஷ்டம்என்ற இராசிக்குத்தகுந்தாற்போல் பேச்சு எழும்.*

- ❀ *தரித்திரத்திற்கு ஓர் அடையாளம், சூட்சுமச்சூழலைச் சீண்டும்படி நடப்பது.*
- ❀ வீட்டிற்குக் கார் வந்தபின், "எனக்குக் கார் வேண்டாம். பஸ்ஸில் போகிறேன்"என எவருக்கும் தோன்றாததை ஒருவர் பேசினால்,



வீட்டில் எத்தனைக் காரிருந்தாலும் அவருக்கு எந்தக் காரும் உதவாதுஎன்ற நிலை உருவாகும்.

✡ *என்ன சொல்கிறோம்என்பது முக்கியம். ஏன் சொல்கிறோம்என்பது அதைவிட முக்கியம். அன்று பேசியது தவறுஎன்று இன்று மனம் உணர்ந்தால், நிலைமை மாறும்.*

✡ பிறவியிலேயே தரித்திரமானவர் அன்னையிடம் வந்து அடக்கமாக இருந்து பெருஞ்செல்வரானதுண்டு. பிறப்பு தரித்திரமானால், அவர் திருவுருமாறினால் அதிர்ஷ்டம், உலகில் தரித்திரமான அனைவருக்கும் வரும்.

✡ தாயார் வீட்டில் நல்லநிலைமை. இருந்தாலும், இருப்பதில் குறைகள் உண்டு. அதனால், கான்சர் செய்திவருகிறது. கனத்தசூழலிருப்பதால், செய்தியை நம்பாவிட்டால், செய்தி விலகும்எனத் தாயார் அறிவார். அது நடந்தது.

✡ தம்பியின் *மனம் செய்தியை நம்பாததால், தியானம் இலயமாயிற்று. அப்படிப்பட்ட தியானத்தில் எதுவும் கரையும்.*

✡ அக்காளுக்கு அதிர்ஷ்டம் வந்தால், அடுத்தகட்ட உறவினருக்கு - தம்பிக்கு - என்ன வரும்என்பதற்குச் சட்டம் உண்டு.

- ❀ மனம் நல்லபடியாக இருந்து, அக்காளிடம் பிரியமிருந்தால் அதிர்ஷ்டம் வரும்.
- ❀ மனம் சாதாரணமாக இருந்தால், அவர் ஜாதகப்படி நடக்கும்.
- ❀ மனம் வெறுப்பாக இருந்தால், அவ்வெண்ணம் அவர் வாழ்வில் பலிக்கும்.
- ❀ பாராமுகமாக இருந்தால், வரும் பேரதிர்ஷ்டம் தவறும்.

✡ செய்தி எப்படி மாறுகிறதுஎன்பதும் சூழலின் தன்மையைப்பொருத்தது.

- ❀ கனத்தசூழலில் செய்தியே தவறுஎன வரும்.
- ❀ சாதாரணச்சூழலில் டெஸ்ட்டில் செய்தி மாறும்.

❀ வலுவில்லாதசூழலில் வந்தது, பிரார்த்தனையால் போகும்.

**பெண்ணுக்கு அன்னை நினைவாகவேயிருக்கிறது:**
**என் நண்பர்கள்எல்லாம் நான் ஏதோ புது மேக்கப் போடுவதாகப் பேசுகிறார்கள்:**

✡ 'தம்பியின் மனைவிக்குக் கான்ஸர்'என்று வந்த செய்தி இல்லையென மாறியது வீட்டில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது.

✡ ஆர்ப்பாட்டம் குறைந்து அமைதியாயிற்று வீடு.

✡ கான்சரில்லைஎன்பது ஆச்சரியம். இந்நிகழ்ச்சி மனத்தை உலுக்கி, அன்னையை ஏற்கச்சொல்லியது பெரியது. ஆனால், *மனம் உள்ளிருந்து அன்னையை அறிந்து ஏற்பது பெரியது; நிலையானது; ஆத்மாவுக்குரிய நம்பிக்கை.*

❀ *புறம் ஏற்படுத்தும் நம்பிக்கை பயிருக்கு நீர்பாய்ச்சுவதுபோன்றது.*

❀ *அகம் நம்பிக்கையால் மலர்வது மழை பயிரை ஆசீர்வதிப்பது போன்றது.*

❀ கணவர் கேட்ட விவரங்களை மனைவி, 'இப்பொழுது பேசக் கூடாது' என்று கூறி மறுத்துவிட்டார். கணவரே கேட்காமல் இருப்பது பக்குவம். அது அவருக்கில்லை. தம்பிக்கிருந்தது.

❀ பெண்ணின் மனம் கணவர்போல் அர்த்தமற்றதாகவோ, தம்பிபோல் நிறைவுடையதாகவோ இல்லாமல், நடுநிலையிலுள்ளது. அவள் முகம் பொலிவுபெற்றது. தாயாரிடம் அதிகமாக நெருங்கி வருகிறாள்.

❀ *The Life Divine படித்தால் ஞானப்பொலிவு வரும்.* பெண்ணுக்கு நம்பிக்கையால் பொலிவு எழுகிறது. *சமர்ப்பணம் செய்தால் முழுமையான பொலிவுண்டு. மனம் அன்னையைத் தானே நாடினால் அது அன்பின் பிரகாசம்.* படிப்பால் வரும் பொலிவு தலைக்கு மேலிருந்து வருவது. *நம்பிக்கையால் வருவது ஆத்மாவிலிருந்து எழுவது. சமர்ப்பணப்பொலிவு சைத்தியப்புருஷனுக்குரியது. அன்பால் வரும் பிரகாசம் ஆத்மா ஆனந்தத்தைக் காண்பதால் உற்பத்தியாவது.* 12 வயதில் முகக்களை இளமைக்குரியது. வசதியான குடும்பத்தில் வளரும் குழந்தைக்கு முகம் களையாக இருப்பது நல்லசாப்பாடு தருவது. புத்திசாலிப்பையன் முகம் பளிச்சென இருப்பது அறிவுக்குரியது. வேதம் ஓதும் வீட்டில் 12 வயதுப் பையன் முகம் தளதளஎன இருப்பது வித்வக்களை. பரம்பரையான செல்வர் மந்திரியானால் அவர் வீட்டுப் பையன் முகத்தெளிவு அந்தஸ்து தருவது. இயல்பாகக் குதூகலமான பையன் அழகாக, கலகலப்பாக இருப்பது vital cheerfulness உணர்வின் செழிப்பு. நல்லஎண்ணம் தரும் களை வேறு. களை வயதாலும், ஆன்மாவாலும், அந்தஸ்தாலும், சுபாவத்தாலும் வருவதை நாமறிவோம். இந்த ஒவ்வொரு நிலைக்கும் உரிய ஆன்மீகப்பொலிவு அழகாக, களையாக, அற்புதமாக எழுவதைக் காண்பது ஓர் ஆச்சரியம்.

❀ தாயார் புத்தகங்களைப் படிப்பது அவற்றின் பெருமையை அந்தராத்மா அறிந்து, அதனால் மனம் அன்னையோடு ஈடுபடுவதாகும். கணவரும், பிள்ளைகளும் படிப்பது, ''இது முக்கியம், படிக்க வேண்டும்"என்று படிப்பதாகும். மேல்நாட்டார் ஸ்பூனால் சாப்பிடுவது ஸ்பூன் மூன்றாம் உதடுபோல் செயல்படும். கிராமத்து மனிதர் நகரத்திற்கு வந்தால், ஸ்பூனால் சாப்பிட்டால், ஸ்பூன் வாயில்படாமல் சாப்பிட முயல்வதைப் பார்க்க வேடிக்கையாக இருக்கும். தாயார் படிப்பதற்கும், மற்றவர் படிப்பதற்கும் அதுபோன்ற வித்தியாசம் உண்டு. தாயாருடைய ஈடுபாடே குறையானது.

**ஏம்மா, எங்களைஎல்லாம் படிக்கச் சொல்லவில்லை:**
**சொல்லியிருந்தால், நான் படித்திருக்கமாட்டேன்:**

✡ சொன்னால் செய்யக்கூடாதுஎன்பதை நாம் வக்கிரபுத்திஎன்போம். Negationஎன்று அதற்குப் பெயர்.

✡ நமக்குத் தெரிந்தவர்களைஎல்லாம் இக்கண்ணோட்டத்தில் பார்த்தால் எவரும் விலக்காக இருக்கமாட்டார்கள்.

✡ நம்மையே கவனித்தால் ஒரே ஒரு செயல் தவறாமல் நாம் இப்படிப் பழகுவது தெரியும்.

✡ அப்படி நம்மைப் பலநாட்கள் கவனித்தபின் அது நமக்குள்ள குணம்என மறந்துபோகும்.

✡ 2 வயதில் குழந்தை ஏன் ஓடுகிறது? அதனுடம்பில் தெம்பு பொங்கி வழிவதால் ஓடுகிறது. அது உடல் வளரும் வயதின்தன்மை. மனம்என்பது சிந்திப்பது. காண்பதை, கேட்பதை மனம் அறிய முயல்வது சிந்தனை. *சிந்தனையின் ஆரம்பம் மறுப்பு*. எது சொன்னாலும் 'வேண்டாம்'எனச் சொல்லும் குழந்தை மனத்தால் சுறுசுறுப்பானது; புத்திசாலிக்குழந்தை. *மறுப்பு மனத்தின் சிந்தனைக்கு ஆரம்பம் என்றால், ஏற்பது சிந்தனை முதிர்ந்து முடிவது*. நம்மையே நாம் கவனித்து, *மறுப்பை ஏற்பாக மாற்றமுயல்வது ஒரு ஜென்ம முன்னேற்றம்*. அது எளிதன்று. *சோதனையாக உள்ளிருந்து முயன்று வெற்றிபெற்றால், வாழ்வின் முடிவில், அடுத்த ஜென்மத்தில் நடக்கவேண்டியது இப்பொழுது நடக்கும்*. இன்க்ரிமெண்ட் ஆண்டுதோறும் வருவது. பிரமோஷன் சில ஆண்டுகட்கு ஒரு முறை வருவது. இதையொருவர் முயன்று வெற்றி பெற்றால், ஓய்வுபெறும்பொழுது வரும் சம்பளம் நாளைக்கு வரும். அதையே சமர்ப்பணத்தால் செய்தால், டிரைவர் மந்திரியானதுபோன்ற மாற்றம் வரும். *எந்தப் பலனையும் எதிர்பாராமல் 'இது முன்னுக்கு வரும் உபாயம்'என அறிந்து மனம் அதை விரும்பி ஏற்று ஒருவரால் இம்முறையை 6 மாதங்கள் அல்லது ஒரு வருஷம் செய்யமுடியுமானால் Bill Gates வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்கள் வரும்.*

✡ தாயார் குழந்தைகளைப் படிக்கச் சொல்லியிருந்தால், தாயார் சொன்னதே அவர்கட்குத் தெரியாமல், ''அது வேண்டாம்''என அவர்கள் விலகிப்போயிருப்பார்கள்.

இது மனித சுபாவம்.



மனிதசுபாவம் மனவளர்ச்சிக்கு உதவும். துரியோதனன் கிருஷ்ணனுடைய படைகளைக் கேட்டதும், அர்ஜுனன் கிருஷ்ணனைக் கேட்டதும், மனிதசுபாவம் செயல்படுவதையும், அது விலக்காகச் செயல்படுவதையும் காட்டுகிறது.

❀ அர்ஜுனன் சிவபெருமான் அம்சமுடையவன்.

❀ துரியோதனன் பிறந்தவுடன் அவன் அழுகுரல் நரிக்குரலாக இருந்தது. வியாசர், "இக்குழந்தை நம் வம்சத்தை அழிக்கும்" என்றார். காந்தாரி துரியோதனனை அழிக்கச் சம்மதப்படவில்லை. கணவனுக்குப் பார்வையில்லைஎன்பதால் தன் கண்களைக் கட்டிக் கொண்ட கற்புக்கரசி அவள். அவள் பொறாமையால் வயிற்றை இடித்துக்கொண்டாள்.

கற்பின் உயர்வும், பொறாமையும் சேர்வது மனிதசுபாவம்.

❀ தாயாருக்கு இவையெல்லாம் தெரியும்என்றாலும், குழந்தைகளைப் படிக்கச் சொல்லாமலிருக்க அவருக்கு வேண்டிய பொறுமை பெரியது. அது மனிதசுபாவத்திற்குரிய பொறுமையில்லை.

❀ பொறுமையிருப்பதால் ஆன்மாவுக்கு உயர்வில்லை.

பொறுமையில்லாத சொத்தையாக இருப்பதால் அது ஆன்மாவுக்குத் தாழ்வில்லை.

செமி.ஃபைனல்ஸ்வரை எங்கள் டீம் வந்தால் அதற்கப்புறம் என்னைக் கேலி செய்யமாட்டேன்என ஒத்துக்கொள்வாயா?

✡ வயதில் சிறியவர்கள் ஆன்மவிழிப்புடையவர்என்பதால் அவர்கள் பிரார்த்தனைகள் அதிகமாகப் பலிக்கும்.

✡ வயதானபின் அறிவுக்குப்பொருந்தாததைக் கேட்கக் கூச்சமாக இருக்கும்.

✡ குழந்தைக்கு அக்கூச்சமிருக்காது.

✡ *கூச்சமற்ற குழந்தை அர்த்தமற்றதைக் கேட்கும்; அன்னை தருவார்.*

✡ நாம் கேட்கக் கூச்சப்படுவதற்கு ஒரு காரணம் அர்த்தமற்றது நடக்காதுஎன்று நமக்குத் தெரியும்.

✡ அர்த்தமுள்ளதுஎன்றால் நம் அறிவுக்குப் புரிவது.

✡ *நமக்குப் புரியாதது நடக்காதுஎன நாம் நம்புவது அறியாமை.*

✡ *எதுவும் நடக்கும்என நினைக்கவோ, பேசவோ அறிவு தடைசெய்யும்.*

✡ *அறிவில்லாதவர்க்கும், வயதில்லாதவர்க்கும், அனுபவமில்லாதவர்க்கும் அத்தடையில்லை.*

✡ *அத்தடையில்லாததால், அது நடக்கும்.*

✡ அப்படி ஒரு காரியம் நடந்தால், 'ஏதோ அப்பொழுது நடந்துவிட்டது' என அதை மறந்துவிடுகிறோம்.

✡ *3 நாட்கள் இடைவிடாமல் அன்னைப் பெயரை ஒருவர் எக்காரணமும் இல்லாமல் சொல்லியபொழுது அவரை அன்னையிடம் அழைத்துப்போய் தரிசனம் செய்வித்தார்கள்.*

✡ சிறியவன் இடைவிடாது பயித்தியம்பிடித்தவன்போல அன்னையை அழைத்ததால், செமிஃபைனல்ஸ்வரை வாராதுஎன்ற டீம் செமி ஃபைனல்ஸில் ஜெயித்தது. பைனலிலும் ஜெயித்தது.

✡ கேலிசெய்யும் மனம் மட்டமானது.

✡ இவ்வளவு பெரிய வெற்றிபெற்றபின், தம்பியிடம் தோல்வியை ஏற்கவும் அவனால் முடியவில்லை.

✡ தோல்வியை ஏற்காதவனை நம்பமுடியாது.

✡ டீமில் சண்டை, கேப்டனுக்கு ஜுரம், காற்று உதவியதுஎன்பவை காரணங்கள்.

  ❀ அன்னைசக்தி, இக்காரணங்களை ஏற்படுத்தி அதன்மூலமாக ஜெயித்தது.

  ❀ இக்காரணங்களில்லாமலும் அது ஜெயிக்க முடியும்.

  ❀ கருவி தேவையா, தேவையில்லையாஎன்பது நம்பிக்கையைப் பொருத்தது.

  ❀ சிறியவனுக்குப் பிரார்த்தனை பலிக்கும்என்ற நம்பிக்கையைவிட அண்ணனை மடக்க அது சந்தர்ப்பம்எனத் தீவிரமாக அன்னையை அழைத்தான்.

  ❀ அது சிறுபிள்ளைத்தனம். அர்த்தமற்ற பிரார்த்தனை.

  ❀ அர்த்தமில்லாவிட்டாலும், பிரார்த்தனைஎன்பதால், அதற்குத் தீவிரம் வந்தால் பலிக்கிறது.

  ❀ *பிரார்த்தனை தீவிரமானால், எந்தப் பிரார்த்தனையும் பலிக்கும். 'அது அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும்என்பதன்று'என நினைக்க நமக்குப் பெரிய நம்பிக்கை வேண்டும். அதுவே பிரார்த்தனையைப் பற்றிய உண்மை.*

'சரணாகதியை எந்த நிலையில் செய்தாலும் பலன் ஒன்றே'என்று அகந்தை உருவாகாதவரைப்பற்றிப் படித்தபோது தெரியவந்தது நினைவுவந்தது:

✡ வளர்ச்சி, முன்னேற்றம், அபிவிருத்திஎன்ற கருத்துகளில் தீராத ஐயமான கருத்து இது.

✡ *சத்தியஜீவியம் இனி வரப்போகிறதுஎன்றாலும், அதன் அம்சம் ஒரு துளியாவது வாழ்வில் எங்காவதிருக்கும்.*

✡ தனக்கு ஏற்கனவே தெரிந்ததை முடிவாக நம்புபவன், எந்தப் புதிய விஷயத்தையும், பழைய கருத்தை ஊர்ஜிதம்செய்யப் பயன்படுத்துவான்.

✡ *ஸ்ரீ அரவிந்தம் (in letter and spirit) அகத்திலும், புறத்திலும் இக்கருத்திற்கு எதிரானது.*

✡ 2000 பக்கங்கள் பெரிய ஆராய்ச்சியின்மூலம் பகவான், அன்னையைப் பற்றி எழுதிய பேராசிரியர், 'பகவான் நம் மரபில் உள்ள ஆன்மீக

அனுபவங்களை தம் அனுபவங்கட்கு உறுதுணையாகக்கொண்டார்' என்று எழுதுவது பரிதாபத்திற்குரியது. பகவானுடைய அனுபவங்கள் பழைய ரிஷிகளின் அனுபவங்கட்கு எதிரானது; அவற்றிலிருந்து புரட்சிகரமாக மாறியதுஎன்று அறியாதவர் கூற்று இது. அப்படிப் பட்டவர்கட்கு சரணாகதி புரியாது. மேற்சொன்ன கருத்து விளங்காது.

✡ அகந்தையுள்ளவன் அகந்தையைச் சரணம்செய்து முன்னேறுகிறான்.

✡ அதனால் அகந்தையே உருவாகாதவன் அகந்தையை உருவாக்கி அதன்பின் அதைச் சரணம்செய்யவேண்டும்எனத் தோன்றுவது இயல்பு. அது தவறு.

✡ விவசாயம் முதிர்ந்து வியாபாரம் எழுந்ததுஎனில் இனி வியாபாரம் செய்ய வேண்டுமானால் முதலில் விவசாயம் செய்யவேண்டும்என்று பொருளன்று.

✡ அந்தச் சட்டம் finite சிறியதற்குரியது.

✡ Infinite பெரியதற்கு அது சட்டமில்லை. நேரடியாக வியாபாரம் செய்யலாம்.

✡ அது புரிய சரணாகதியின் சிறப்புப் புரியவேண்டும்.

✡ *எந்தச் சிறியதும் (finite) நேரடியாகப் பெரியதாகமுடியும். அதற்குரிய கருவி சரணாகதி.*

✡ *சரணாகதி அனந்தத்தின் கருவிஎன்றால் சரணாகதியே அனந்தம்.*

✡ சமூக முன்னேற்றத்தில் இந்த உண்மையைக் காண்கிறோம்.

✡ *நமக்குக் கர்மத்தில் நம்பிக்கை; லிமிட்டில் நம்பிக்கை; நமக்கில்லைஎன நம்புகிறோம். 'முடியாது'என்பது நம் கொள்கை. 'சிறியது சிறியதுதான்; பெரியது பெரியதுதான்'என்பதை நம்புபவருக்குச் சரணாகதி, அனந்தம், ஸ்ரீ அரவிந்தம் இல்லை.*

✡ பிரதமராகவேண்டுமானால் நேரு குடும்பத்தில் பிறக்கவேண்டும்என்ற நம்பிக்கையை இல்லைஎன பிற்கால வரலாறு காண்பிக்கிறது.



✡ *தத்துவமும், உதாரணமும் புரியவேண்டும்; அதை மனம் ஏற்கவேண்டும்; ஏற்க ஆர்வம்வேண்டும்; ஏற்பதில் அனந்தம் எழுவதைக் காணவேண்டும்.*

*“எங்கள் குடும்பம்”* பக்கம் 93-94இல் முந்தைய கருத்து மேலும் விளக்கப்படுகிறது; இது முக்கியமானது:

✡ இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் பதவிக்குவந்தவர்கள் சுதந்திர இயக்கத்தில் சேர்ந்து நெடுநாள் உழைத்தவர்கள்.

✡ அதனால் அதுமட்டுமே பதவிக்குவரும் பாதைஎன்றுகொண்டால் இராதாகிருஷ்ணன், C.D.தேஷ்முக், சண்முகம் செட்டி, ஜான் மத்தாய் போன்றவர்கள் அப்பாதையில் வரவில்லை.

✡ சுதந்திரஇயக்கம் கொடுத்த தகுதியை வேறு பாதையில் எவர் பெற்றிருந்தாலும் அவருக்கு அத்தகுதியுண்டுஎன்றாகிறது.

✡ *ஒரே தகுதியைப்பெற ஒன்றுக்குமேற்பட்ட பாதைகளிருக்கின்றன.*

✡ *சர்வமும் அனந்தம்என்பதால் அப்பாதைகளும் அனந்தம்.*

✡ *அனந்தமே இலட்சியமானால், அதற்குரிய கருவி அனந்தமான கருவியாக இருக்கவேண்டும்.*

✡ யோகம் அறிந்த எந்தக் கருவியும் அனந்தமான கருவியில்லை.

✡ *10 ஆண்டுகள் முயன்று சூட்சுமமான இரகஸ்யத்தை பகவான் கண்டுகொண்டவற்றுள் சரணாகதியும் ஒன்று.*

✡ *சத்தியஜீவியமே சத்தியம்என்ற* சுவாமி விவேகானந்தர், அதை அடையும் மார்க்கத்தைக் கூறவில்லை.

✡ *சத்தியஜீவியம் பூரணம், முழுமை. நாமறிருந்திருப்பது மேல்மனம். அன்று ஸ்ரீ அரவிந்தர் அறிந்தது நிஷ்டை. நிஷ்டை அக்ஷரப்பிரம்மத்திற்கு அழைத்துப்போகிறது. சத்தியஜீவியத்திற்கு அழைத்துப்போகவில்லை. இக்கட்டான இந்நிலையில் பகவான் 10 ஆண்டுகளிருந்து,*

❀ *சத்தியஜீவியம் போக உள்ளே போய் மேலே போகவேண்டும்.*

- ❀ *வந்தவழியே மீண்டும் போகவேண்டும்.*
- ❀ *பிரபஞ்சம் வழியாகப் பிரம்மத்தையடையவேண்டும்.*
- ❀ *ஆன்மாவை மற்ற கரணங்களிலிருந்து பிரிக்கக்கூடாது.*
- ❀ *ஆன்மாமட்டும் தனியாக, சத்தியஜீவியத்தை அடையமுடியாது.*
- ❀ *ஆன்மாவும் வளரக்கூடியது.*
- ❀ *காலமோ, கடந்ததோ சத்தியஜீவியத்தை எட்டாது. மூன்றாம் நிலை காலம் உண்டு. அதற்குக் காலத்தின் முழுமையுண்டு.*
- ❀ *சத்தியஜீவியம்என்ற முழுமையையடைய நாம் முழுமையில் ஆரம்பிக்க வேண்டும். க்ஷணமும் முழுமையைவிட்டு அகலமுடியாது.*
- ❀ *முழுமை மேல்மனத்திலோ, உள்மனத்திலோயில்லை; அடிமனத்தில் உள்ளது. அங்குள்ள வளரும்ஆன்மாவில் உள்ளது.*
- ❀ *அதற்குரிய கருவி நாம் பெற்றவற்றையெல்லாம் கைவிட்ட நிலையான சரணாகதிஎனக் கண்டார்.*
- ❀ *இதை வாழ்வில் காண்பது அதிர்ஷ்டம், அருள், பேரருளாகும்.*

**வாழ்வில் பூரணத்தை அறியுமுன் யோக அம்சங்களின் பூரணத்தை அறியவேண்டும்:**

- ❀ *சத்தியஜீவியம்என்பது பூரணம்.*
- ❀ *அது சிருஷ்டியின் பூரணம்.*
- ❀ **அங்கு ஒரு ஜீவன் எல்லா ஜீவன்களிலும், எல்லா ஜீவன்களும் ஒரு ஜீவனிலும், இறைவன் எல்லா ஜீவன்களிலும், எல்லா ஜீவன்களும் இறைவனிலும் உள்ள பூரணம் உண்டு. இப்பூரணத்தில் பிரிவினையில்லை. பிரிந்த தோற்றம் உண்டு. சத்தியஜீவியம் 3-ஆம் நிலைக் காலத்திற்குரியது.**
- ❀ *நாம் உள்ள மேல்மனம் காலம், அகந்தை, மனம், சிறியது ஆகியவற்றால் ஆனது.*



- ❀ *உள்மனம் காலத்தைக்கடந்ததுஎன்றாலும் அதற்கு முழுமையில்லை.*
- ❀ *அடிமனத்திற்குப் பிரபஞ்ச முழுமையுண்டேதவிர ஆன்மீக முழுமை இல்லை.*
- ❀ *அடிமனத்திலுள்ள சைத்தியப்புருஷனுக்கு முழுமையுண்டு.*
- ❀ *அவனையடைய மனம் காலம், அகந்தை, சிறியதிலிருந்து விடுபட, ஆசனம், பிராணயாமம் எதுவும் பயன்படாது.*
- ❀ *பின் எது பயன்படும்? 'முழுமை' பயன்படும்.*
- ❀ *மனத்திற்கு முழுமையில்லை. முழுமை வேண்டுமானால் மனத்தைக் கடக்கவேண்டும்.*
- ❀ *காலத்தைக்கடந்து 3-ஆம் நிலைக் காலத்தை அடையவேண்டும்.*
- ❀ *நாம் பெற்ற திறமைகள் பகுதி.*
- ❀ *இப்பகுதியை முழுமையாக்கினால் அது மனிதமுழுமையாகும்.*
- ❀ *இப்பகுதியைக் கைவிட்டால் சத்தியஜீவிய முழுமை எழும்.*
- ❀ *மேல்மனத்தின் 4 அம்சங்களைக் கைவிடுதல் அடிமன முழுமைக்கு வழிவிடும்.*
- ❀ பகுதியைக் கைவிடுவது சரணாகதிஎனக் கூறப்படுகிறது.
- ❀ *இதை பகவான் 10 ஆண்டுகளில் கண்டுகொண்டார்.*

இதையே வாழ்வில் எப்படிக் கூறுவது*?*

- ❀ **சமூகம், பணம், நியாயம், தர்மம், கடமை ஆகியவை பகுதிகள்.** *இப்பகுதிகளைக் கைவிட்டு சத்தியஜீவிய முழுமையை எட்டும்வகை சரணாகதி.*
- ❀ *நம் திறமையைக் கைவிட்டால், அருள் பேரருளாகும்.*
- ❀ *அதை ஆரம்பிக்க உதவுவது சமர்ப்பணம்.*
- ❀ எண்ணமற்ற, உணர்வற்ற, செயலற்ற மௌனத்தில் செய்யும் சமர்ப்பணம் நிறைவுபெற்று சரணாகதியாகும்.

❀ *Man has to utterly decondition himself and not recondition, but offer himself to the Force.*

மனம் குடும்பத்தைவிட்டுச் சரணாகதியை நாடியது. அதன்பிறகு வந்த செய்திகள் பல. நம்பமுடியாத பெரிய செய்திகள். இதன் முடிவு 'வேலை உள்ளேயிருக்கிறது'எனப் புரிந்தது:

✡ *மனம் குடும்பத்தைவிட்டுச் சரணாகதியை நாடுவது ஞானயோகச் சமாதியைவிடப் பெரியது.*

✡ அதன்பிறகு மனம் வாழ்வை அசைத்து நடத்தியவை பெரிய செய்திகள்.

✡ *இந்த வேலையை உள்ளேதான் செய்யவேண்டும்.*

✡ *உள்ளேஎன்பது புறத்தை உட்கொண்ட அகம். இது மூன்றாம் நிலை காலத்திற்குரியது.*

✡ செய்திகளுக்காக மனம் சரணாகதியை நாட முயன்றால் பலன் இருக்காது.

✡ *வேலை உள்ளேயிருக்கிறதுஎன்பதன் சூட்சுமம்,*
*நம் எதிர்காலம் நம் கையிலிருப்பதாக அர்த்தம்.*

✡ இதை ஆரம்பித்ததிலிருந்து தாயார் கண்டவை,

- ❀ *மனம் அமைதியாயிற்று;*
  *வேலை அன்னைக்கு, நமக்கில்லைஎனப் புரிந்தது.*
- ❀ *பேரமைதியாய்த் தெரியும் அமைதி மேல்மனத்தின் மேற்பகுதி -யினுடையது;*
  *அதைக் கடந்ததால் இது புரிகிறது.*
- ❀ *எழுந்து அடங்கும் ஆசைகள் எழவில்லை;*
  *உணர்ச்சி கட்டுப்பாட்டிலிருக்கிறது.*
- ❀ *அவ்வாசை பிறர்மூலம் பூர்த்தியாகிறது;*
  *சுயநலம் மாறி பரநலம் வந்துள்ளது.*
- ❀ தான் ஆரம்பிக்கவில்லைஎன்பதால் பிறர் தருவதை ஏற்கிறார்;
  *நாமே தேடுவது தவறு; பிறர் தருவது அன்னை தருவது.*
- ❀ ஏதோ ஒருவகையில் தம் வாழ்வு இதுவரை யோகம்;
  கவனிக்காவிட்டால் வளரும்.
- ❀ சர்க்கார் ஊழியர் எவர்க்கும் முழு சர்க்கார் அதிகாரம் உண்டு;
  *அன்பர் எவருக்கும் முழு அன்னைசக்தியுண்டு.*
- ❀ உயர்ந்த நிலையில் தம்மைப் பதிவுசெய்துகொண்டதை அறிந்தார்;
  *Self awareness தாம் யார்என அறிந்தார்.*
- ❀ *இவை வளரும் ஆன்மாவால் செய்யப்படவேண்டியவை;*
  *வாழ்வையும், யோகத்தையும் பிரிக்கமுடியாது.*



அன்னை வீட்டிற்குள் வந்தபின் கட்சி, பதவிஏற்றதுபோலிருக்கும்:
அன்னை வாழ்வின் உயர்வை சுயநலமாக்கினால் அரசியல்வாதி சொத்து சேர்ப்பதுபோலாகும்:
பெரியஇடத்து அழைப்பை ஏற்று எவரை, எங்கு அனுப்பினாலும், மானம்போகும்படி நடந்துகொள்வார்கள்:

✡ நாம் வாழ்வின் ஒரு பகுதியைமட்டும் அறிவோம்.

✡ அடுத்த பகுதியை 'தீமை'என ஒதுக்குகிறோம்.

✡ *நாம் ஒதுக்கும் பகுதி நம்மைவிட்டுப் போவதில்லை. தோட்டத்து வழியாக நம் வீட்டினுள்ளும், நம்முள்ளும் வருகிறது. நாம் அதை மறுக்க முடியாததால், மறைத்துவிடுகிறோம்.*

✡ சமூகம் மாறும்பொழுது - வளரும்பொழுது, புரட்சி நடக்கும்பொழுது - நாம் மறைத்த பகுதி வெளிவருகிறது.

✡ வெளிவந்து, வளர்ந்து ஆட்சிசெய்கிறது. நாம் அதன் ஆட்சிக்குப் புரியாமல் பணிகிறோம்.
விலக்கவேண்டும்என்பதை முக்கியமாகப் பீடத்தில் அமர்த்துகிறோம்.

வாய், அது தவறுஎன்று பேசினாலும், வாழ்வு தவறாகவே நடக்கிறது.

- ✡ *விலக்கவேண்டியதன் கருவைப் புரிந்துகொள்ளவோ, ஏற்கவோ மனம் வருவதில்லை. வெகுநாட்களுக்குமுன் அக்கருவைக் காயப்படுத்தியதால், இன்று அது வாழ்வையே கறுப்பாக்குகிறது.*
- ✡ *இதற்குத் தீர்வு புறத்திலில்லை; அகத்திலுண்டு.*
- ✡ நம் மனத்தின் கறுப்பு நமக்குத் தெரியும். கறுப்பைக்கண்டு, அடக்கமாக ஏற்று, மனம் மாறி, திருவுருமாறினால் புறம் மாறும்.
- ✡ *அகம் காண மறுக்கும்வரை புறத்தில் கறுப்பு பூதாகாரமாக வளரும்.*
- ✡ **அன்னை வீட்டினுள் வருவது, அரசியல் கட்சி பதவிக்கு வருவது போன்றது. ஏனெனில், பதவியில்லாதபொழுது அதிகாரமில்லாததால் நல்லதைப் பேசுவார்கள். கெட்டது அடங்கியிருக்கும். பதவி வந்தபிறகு நல்லது மறந்துபோகும். கெட்டதுமட்டும் நினைவிருக்கும், செயல்படும், வளரும்.**
- ✡ **அன்னை வரும்முன் பெரியஇடத்து அழைப்பு வாராது; வந்தபின் வரும். அங்குப் போனால் பேசத் தெரியாது. அசம்பாவிதமாகப் பேசுவோம். மானம் போகும். மானம் போவதே தெரியாது. It is unconscious low consciousness.**
- ✡ *தாமரைஇலைத் தண்ணீராக, சாட்சிப்புருஷனாகப் பார்த்துக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளில்லை இவை. அற்புதம், பிரம்ம ஜனனம் என்பதாக வளரும் ஆன்மா நிகழ்ச்சிகளில் எழுந்து, சிருஷ்டியைத் தீமையிலிருந்து நன்மைக்கு மாற்றிநடத்தும் பொறுப்பை ஏற்கவேண்டும்.*
- ✡ **ஆபீஸில் இலஞ்சம் நடமாடினால், அன்பர் இலஞ்சம் வாங்காமல் ஒதுங்கியிருந்தால், அனைவரும் சேர்ந்து அவர் இலஞ்சம் வாங்குவதாக அன்பரைத் தண்டிப்பார்கள். அவருக்குரிய வழிகள் 2.**
  1) **அதைவிட்டு விலகி, தன் அதிகாரத்தில் செயல்படும் ஸ்தாபனத்தை நிறுவி அங்கு இலஞ்சமில்லாமல் நடத்தவேண்டும். இலஞ்சம் வாங்காமலிருப்பதுடன், இலஞ்சம் கொடுக்காமலிருக்கவேண்டும்.**
  2) **ஆபீஸில் அனைவரையும் இவர் தலைமையில் சேர்த்து இலஞ்சம் வாங்காமல் செயல்படவேண்டும்.**
- ✡ **அன்பர்கள் எளியவர்கள்என்பதாலும், இவையிரண்டும் பிரம்மாண்ட -மானவையானதாலும், பொதுவாக அன்பர்கள் ஒதுங்கி வாழ முயல்வார்கள். அது பயன் தாராது. பயன் தருவதானால், அதைவிட்டு வெளியேற உதவும்.**
- ✡ **அன்பர் இலஞ்சம் வாங்க ஆரம்பித்துவிட்டால், நாம் சொல்வதற்கு ஒன்றுமில்லை.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம் அன்றாட வேலைகளில் நமக்கு முழு ஞானம் உண்டா? அதில் முடியாததில்லைஎன்று சொல்ல முடியுமல்லவா? ஆனால் அது கண்மூடித்தனமான ஞானம் (an unconscious possession).

***முழுஞானம் முடியாததில்லை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சூட்சும உடல்என்பது (**True physical**) உண்மையான உடலிலிருந்து சற்று மாறுபட்டது.

***சூட்சும உடல்.***

## Never has man lied as much as now.

**இன்று மனிதன் பொய் சொல்வதைப்போல் என்றும் சொல்லியதில்லை.**

✡ *அன்னை உலகத்தின் வரலாற்றை அறிந்தவர். அதைக்கடந்து பூமியின் வரலாற்றை அறிந்தவர்.*

✡ *சூட்சுமலோகத்தில் பூமியின் வரலாறு (Earth's memory) உள்ள இடத்தை அறிந்தவர்.*

✡ **இந்தியாவைப்பொருத்தவரை 200 ஆண்டுகட்குமுன்பும் இங்கு பொய் சொல்பவரைப் பார்த்ததில்லைஎன ஆங்கிலேயர் கூறியதுண்டு. பிற நாட்டாரும் அப்படிக் கூறியுள்ளனர்.**

✡ *உலகில் Lord of Falsehood பொய்யின் பிரபு அழிந்துவிட்டதாக அன்னை கூறுகிறார். அழியும்நேரம் சுடர் பிரகாசிப்பதைப்போல், பொய் தன் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்துகிறது.*

✡ **பொய்என்றால் என்ன? அதை அழிப்பது எப்படி?**

✡ *மெய் (Infinite) வளர்ந்து ஆண்டவனையடையும். அதுபோல் பொய் வளரமுடியாது. வளர்ந்தால் முடிவான கட்டம் வருமுன் அழியும்என்கிறார் பகவான். There is no absolute falsehood as Absolute Truth. முழுப்பொய்என்பது இருக்கமுடியாது. ஏனெனில், அதற்கு வித்தாக மெய் தேவை.*

✡ **நாட்டில் ஊழல் வளர்வது அனைவருக்கும் வருத்தம் தருவது.**

✡ **ஊழல் வளர்வதற்குக் காரணம் செல்வம் வளர்வதால்என அறியும்பொழுது வருத்தம் குறைகிறது. ஏழை நாட்டில் செல்வம் வரும்பொழுது அதே வேகத்தில் நாணயம் வளர்வதில்லை. அதனால் ஊழல் வளர்கிறது. முன்னேறிய நாடுகளெல்லாம் இக்கட்டத்திற்கு வந்துள்ளன. எனவே ஊழல் எதிர்காலத்திலிருக்காதுஎன்பது தெளிவு தருகிறது.**



✡ *மெய் வளர, பொய் வளர்வது அவசியம்எனத் தெரிவதால், பொய் நமக்கு பயம் விளைவிப்பதில்லை.*

✡ **வளரும் குழந்தை சாப்பிடும்பொழுது சாப்பாட்டை இறைக்கும், படிக்கும்பொழுது பேப்பர் கிழிந்துபோகும், ஏராளமான பொருள்கள் விரயமாகும். இதெல்லாம் குழந்தையின் வளர்ச்சியுடன் சேர்ந்தது; குழந்தை வளர்ந்தபின்னிருக்காது; இது அவசியம். இதை நாம் அனைவரும் அனுபவிக்கவேண்டும்என்ற கருத்து தெம்பு தரும். அதுபோல் ஊழல்.**

✡ *மனிதனுடைய உண்மையைத் தொடர்ந்து சோதிக்க (hostile forces) தீயசக்திகள் அவசியம். மனிதன் முழு உண்மையை ஏற்றால் தீயசக்திகள் அழியும்என்பதுபோல் மனிதன் சத்தியத்தை ஏற்க, பொய் உலகில் உறைகல்லாக உலவுகிறது.*

✡ **நாத்திகப் பிரச்சாரம் ஆஸ்திகனை மூடநம்பிக்கையிலிருந்து காப்பாற்றுகிறது.**

✡ **நாம் ஏன் பொய் சொல்கிறோம்?**

- ❀ **பொய் சொல்வது ஆதாயம்என நினைக்கிறோம்.**
- ❀ **பொய் சொல்லாமல் வாழமுடியாதுஎன நினைக்கிறோம்.**
- ❀ *இன்று சொல்லும் பொய் நாளைக்குப் பெரிய நஷ்டம் தரும்எனத் தெரிவதில்லை.*
- ❀ *இயலாமையால் பொய் சொல்கிறோம்.*
- ❀ *பொய் சொல்லி நிம்மதியாக வாழமுடியாது; பொய் சொல்லாமல் நிம்மதியாக வாழலாம்என அறிவதில்லை.*
- ❀ *குறை பொய்.*
- ❀ *நிறைவு, மெய்.*

❀❀❀

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIII. The Divine Maya

There is a distinction between the lower and higher Maya. Page No.116 Para No.10
It is a link in thought.
It is a cosmic Fact.
The pessimist philosophy misses its existence.
The illusionist philosophy neglects it.
They mistake the Overmind to be the Mind.
They believe Mind created the world.
If the world had been created by mental Maya, it would be a paradox.
It would be inexplicable.
It would be a floating nightmare of conscious existence.
It cannot be called illusion or reality.
The Mind is only an intermediate term.
Above is the creative governing knowledge.
Below is the soul imprisoned in its works.
Sachchidananda is lost in self-oblivion.
He is involved in one of His lower movements.



## 13. தெய்வீக மாயை

மாயையில் இரு பகுதிகள் உள்ளன. அவை வேறுபட்டவை.

அதுவே எண்ணத்தை உயர்த்தும் ஏணி.
அது பிரபஞ்ச சத்தியம்.
நம்பிக்கையற்றவர் இதைக் காண மறுக்கிறார்கள்.
மாயாவாதிகள் இதைப் புறக்கணிக்கிறார்கள்.
தெய்வலோகத்தை அவர்கள் மனம்எனக் கொள்கின்றனர்.
மனம் உலகை உற்பத்திசெய்ததாக நினைக்கிறார்கள்.
மனம் உலகை சிருஷ்டித்தது உண்மையானால், அது ஒரு புதிராகும்.

அதை விளக்கமுடியாது.
அது சத்தினுடைய வாழ்வை சிம்மசொப்பனமாக்கும்.
அது சத்தியமாகாது; மாயையுமாகாது.
மனம் இடைப்பட்ட கருவி.
மேலே சிருஷ்டிஞானம் உண்டு.
கீழே ஆத்மா வேலையுள் சிறைப்பட்டுள்ளது.
சச்சிதானந்தம் தன்னுள் தன்னை இழந்துள்ளது.
சச்சிதானந்தம் மனிதஉலகில் சிறைப்பட்டுள்ளது.

**It is the self-oblivious absorption of Force.**
**The Force is lost in the form of her own workings.**
**Sachchidananda must return towards Himself.**
**Mind is one of His instruments.**
**It is an instrument in the descent and the ascent.**
**Mind is an instrument of creation in the descent.**
**Mind is not the secret creatrix.**
**It is a transitional stage in the ascent.**
**Mind is not our high original source of cosmic existence.**
**Nor is it the consummate term.**

**Page No.116**
**Para No.11**

**There are different philosophies.**
**Some of them recognise Mind as the creator of the worlds.**
**They accept Mind as the original principle.**
**There are forms in the Universe.**
**They consider Mind as a mediator.**
**Some are called noumenal.**
**Others are idealistic.**
**The noumenal consider the world as created by Mind.**
**They do not recognise any other in the cosmos.**
**Thought and idea go with Mind.**
**But Idea may be purely arbitrary.**
**It may not have any essential relation with Truth.**
**Let us suppose such a truth exists.**
**It then becomes a mere Absolute.**
**It is aloof from all relations.**
**It is irreconcilable with our world.**
**What is in front is the conceptive phenomenon.**



**சக்தி தன்னை மறந்த நிலை அது.**
**சக்தி ரூபத்துள் மறைந்துள்ளது.**
**சத் மீண்டும் தன்னையடையவேண்டும்.**
**மனம் அதன் பல கருவிகளுள் ஒன்று.**
**சிருஷ்டிக்கும், பரிணாமத்திற்கும் மனம் கருவி.**
**சிருஷ்டி நம்மை நோக்கிவரும்பொழுது மனம் கருவியாகச் செயல்படுகிறது.**
**மனம் சிருஷ்டிக்கர்த்தாயில்லை.**
**பரிணாமத்திற்கு மாறும் கருவி மனம்.**
**பிரபஞ்சத்துள் ஆதிமூலம் மனமில்லை.**
**மனம் பிரபஞ்சத்தின் முடிவான ரூபமுமில்லை.**

**தத்துவங்கள் பல.**
**சில மனமே உலகை சிருஷ்டித்ததாகக் கருதுகின்றன.**

**மனத்தையே அவை ஆதிஎனக் கருதுகின்றன.**
**அவை பிரபஞ்சரூபங்கள்.**
**மனத்தை இடைப்பட்டதாக அவை கருதுகின்றன.**
**சில தத்துவங்கள் யதார்த்தமானவை.**
**மற்றவை இலட்சியமானவை.**
**யதார்த்தமான தத்துவம் உலகை மனம் சிருஷ்டித்ததாகக் கருதுகிறது.**
**பிரபஞ்சத்தில் மனத்தைமட்டுமே அவை கருதுகின்றன.**
**எண்ணமும், கருத்தும் மனத்தைச் சார்ந்தவை.**
**எண்ணம்என்பது நாமே வைத்துக்கொள்வது.**
**அதற்கும் சத்தியத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.**
**அப்படி ஒரு சத்தியமிருப்பதாகக்கொள்வோம்.**
**அது பிரம்மம்எனப்படும்.**
**அதற்கும் உறவுக்கும் தொடர்பில்லை.**
**உலகத்திற்கு அது ஒத்துவாராது.**
**எண்ணம் தோற்றமாக முன்னே நிற்கிறது.**

There is a Truth behind.
The idealistic interpretation supposes a relation between them.
It is a relation of opposition and antinomy.
Sri Aurobindo presents yet another view.
It goes farther in idealism.
It sees the creative Idea.
It is a Real Idea.
The Real-Idea has a spiritual meaning.
It is a power.
A power of Conscious-Force.
It can express the real being.
It is born out of the real being.
It partakes of its nature.
It is not a child of void.
Nor is it a weaver of fictions.
It is Conscious Reality.
It throws itself into mutable forms.
They are forms of its own substance.
The substance is imperishable.
It is also immutable.
The world is not a figment of Mental conception.
Even the Universal Mind cannot create it.
The world is a conscious birth.
It is a birth of something beyond Mind.
It is born into forms of itself.
There is a Truth of conscious being.
It supports these forms.
That Truth express itself in these forms.
There is a knowledge corresponding to the Truth.



அதன்பின் ஒரு சத்தியம் உண்டு.
இவற்றிடையே தொடர்புண்டுஎன இலட்சியவாதம் கூறுகிறது.
இது எதிரான உறவு.
பகவான் ஸ்ரீ அரவிந்தர் அடுத்தக்கட்ட இலட்சியத்தைப்பற்றிப் பேசுகிறார்.
அவர் கூறுவது இலட்சியத்தைக்கடந்தது.
சிருஷ்டியின் எண்ணக்கருவை அது காண்கிறது.
அதை ஜீவனுள்ள எண்ணம்எனக் கூறுகிறது.
அதற்கு ஓர் ஆன்மீகவிளக்கம் உண்டு.
அது ஒரு சக்தி.
தன்னையறியும் சக்தியின் பகுதியது.
அதனால் சத்புருஷனை வெளிப்படுத்த முடியும்.
அது சத்புருஷனில் ஜனிக்கிறது.
ஜீவனுள்ள எண்ணம் சத்புருஷச்சுபாவம்பெற்றது.
அது சூன்யத்தில் பிறந்ததில்லை.
அது கற்பனையான மாயையில்லை.
அது தன்னையறியும் சத்தியம்.
சத்தியம் ரூபம்பெறுகிறது.
அந்த ரூபங்கள் சத்புருஷனுடைய அஸ்திவாரத்திற்குடையவை.
அஸ்திவாரம் அழியாதது.
அது சலனமற்றது.
உலகம் மனத்தின் கற்பனையன்று.
பிரபஞ்சமனமும் அதை சிருஷ்டிக்கமுடியாது.
உலகம்என்பது தான் விரும்பிப் பிறந்தது.
அது மனத்தைக்கடந்த ஜனனம்.
அது ரூபங்களாகப் பிறக்கிறது.
அது சத்புருஷ சத்தியம்.
அது ரூபங்களை ஆதரிக்கிறது.
சத்தியம் ரூபமாகிறது.
சத்தியத்தை வெளிப்படுத்தும் ஞானம் உண்டு.

**It reigns.**
**It is the Supramental Truth Consciousness.**
**It ORGANISES Real Ideas.**
**The organisation is in perfect harmony.**
**They are cast into the mental-vital-material mould.**
**That harmony precedes them.**

*Contd...*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உடல் மனத்தை நிர்ணயிப்பது சிறிய உண்மை. மனம் உடலை நிர்ணயிப்பது பெரிய உண்மை.

***உண்மையின் இரு துருவங்கள்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பேசித் தீர்க்கமுடியாத பிரச்சினைகளைப் பேசாமல் தீர்க்கமுடியும். அனுபவமில்லாமல் எழுப்பிய பிரச்சினைகளை அனுபவம் வந்தபின் தீர்க்கலாம். அதைப் பேசித் தீர்ப்பதற்குப் பதிலாக மௌனத்தால் தீர்க்கலாம். ஏனெனில், பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்என்ற மனநிலை ஏற்பட்டபின் அதை வெளியிடும் அளவுக்கு அறிவு வளர்ந்திருப்பதில்லை.

***அறிவைவிட அனுபவம் முக்கியம்.***



**அது ஆட்சி செய்கிறது.**
**அதையே சத்தியஜீவியம்என்கிறோம்.**
**ஜீவனுள்ள எண்ணத்தை சத்தியஜீவியம் செயல்படவைக்கிறது.**
**அச்செயல் சுமுகமானது.**
**உடல்-உயிர்-மனம் ஆகியவற்றின் ரூபமாக அவை வெளிப்படுகின்றன.**
**அவற்றின் சுமுகம் வெளிப்படுமுன் எழுகிறது.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நமக்கு உரிமையில்லாததை நாம் விரும்புகிறோம். மற்றவர்க்கு உரிமையில்லாததை நாமே முனைந்தளித்தால் அச்செயல் (love) அன்பாக மாறுகிறது.

***அருளாக வருவது அன்பாக வெளிப்படுகிறது.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தோல்வி, சோம்பல், எதிர்ப்பு, விரக்தி, துரோகம் ஆகிய ரூபத்தில் ஆரம்பத்தில் அன்னை நம்மை நாடிவருவதால், நம்மால் அவரைக் காணமுடிவதில்லை; ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

***ரூபத்தை விலக்கி அன்னையைக் கண்டு பெறுவது நிறைவு.***

## P.52 A joy that drags not sorrow as its shade.

சோகத்தின் சாயலற்ற மகிழ்ச்சி.

- ✡ தனக்காக விதிக்கப்பட்ட இவற்றிற்காக அவள் ஏங்குகிறாள்.
- ✡ சொர்க்கத்திற்குச் சொந்தமானதை அவள் தனக்குரியதுஎன உரிமை கொண்டாடுகிறாள்.
- ✡ உலகை ஒரு பார்வையால் கடவுளும் அவள் உரிமையை நியாயம்என ஏற்கிறார்.
- ✡ அறிவைக்கடந்த ஒளியின் தூய்மை ஏற்கிறது.
- ✡ ஞானம் அதன் கிரயப்பத்திரம்.
- ✡ குருட்டுஎண்ணம் அறியாததை ஆத்மா ஏற்கிறது.
- ✡ உலகில் அபத்தத்தின் ஆர்ப்பாட்டம் மோட்சத்தில் சத்தியவாகனம்.
- ✡ இறைவனின் புரியாத புதிர் எதிர்காலச் சின்னம்.
- ✡ மனிதனுக்கு நிகழ்காலம் நிதர்சனம்.
- ✡ உணர்ச்சியில் சிக்கலை உதறமுடியாது.
- ✡ உலகிலும், அதைக்கடந்தும் நடப்பது அதுவே.
- ✡ எல்லையற்ற திட்டத்தின் எண்ணற்ற பகுதிகள்.
- ✡ அவன் உள்ளம் அறியும், அதுமட்டும் அறியும்.
- ✡ புறநிகழ்ச்சிகளின் வித்து அகவுணர்வாகும்.
- ✡ தவறிவந்த விதியும் தற்செயலை ஏற்கிறது.
- ✡ அர்த்தமற்ற முடிவுகள் அனந்தம்.
- ✡ பார்வையில்படாத சத்தியம் எழுதும் ஊமை வரைபடங்கள்.
- ✡ வாழ்வின் தோற்றத்தை வகுக்கும் நிகழ்ச்சிகள்.



- ✡ அறியாததை நிர்ணயிப்பவன் அறிந்ததை அனுப்புகிறான்.
- ✡ ஆழ்மனம் அதிர்ந்து சூன்யமாயிற்று.
- ✡ விவரமற்ற உணர்ச்சி ஆச்சரியத்திலாழ்த்துவதில்லை.
- ✡ மறைந்த மகத்துவங்களின் மலர்ந்த தோற்றம்.
- ✡ யதார்த்த உலகம் கண்டறியாதது.
- ✡ ஒளிந்த சக்தியின் ஆத்மஜோதியில் அவை பிறந்தவை.
- ✡ அவசரமாக மலையைக் குடைந்து வழிகண்டான்.
- ✡ சூட்சுமச் சாகரத்தைக் கடப்பது யார்?
- ✡ ஆத்மாவின் அவசியத்தைஎப்படி அறிவது?
- ✡ தீர்க்கமான அலட்சியத்தின் தீவிர விளைவு.
- ✡ அன்றாட வாழ்வின் அவசியத்துள் உறைபவன்.
- ✡ நம் பார்வை புறத்திலுள்ளது.
- ✡ சந்தர்ப்பச் சகடம் கடகடக்கிறது.
- ✡ மறைந்த இரகஸ்யத்தை மனம் கருதுகிறது.
- ✡ தீர்க்கதரிசனம் நமக்குரியது.
- ✡ ஆத்மாவில் நாம் உறையலாம்.
- ✡ அந்தரங்கக் குரலைக் கேட்கலாம்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உடைந்தபொம்மைக்காக அழும் குழந்தையின் வருத்தம், வளர்ந்தவர்க்கு வாராது. அதுபோல் நாம் உடலால்படும் துன்பம் யோக முதிர்ச்சியுற்றவர்க்கு இல்லை.

***யோகிக்குத் துன்பமில்லை.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**849) அது புரியாத நேரத்தில் அறிகுறிகளை மட்டும் நம்பி, சலனமற்ற சமத்துவத்தைப்பெற்றிருப்பது நம்பிக்கையுடன் செயல்படுவதாகும்.**

*சலனமற்ற நிதானம் தெய்வநம்பிக்கை.*

✡ வாழ்வின் சட்டங்கள் நேரானவையாக இருக்கும்பொழுது நமக்கு எளிதாக இருக்கின்றது.

✡ சட்டம் தலைகீழே இருந்தால், புரிவது கஷ்டம். ஒவ்வொரு முறையும் தவறு வரும்.

✡ அண்ணன் வீட்டுக்கு வரும்தோறும் குழந்தை விழுந்து காயப்பட்டுக் கொள்கிறதுஎன்பது புரியமுடியாத விஷயம். புரிந்தால்எப்படிச் செயல்படுவது?

✡ ஓர் எழுத்தாளர் 4 புத்தகங்கள் வெளியிட்டார். 4வது புத்தகம் வெளியிட்டவுடன் அவருக்குக் கான்ஸர் ஆப்பரேஷன் நடந்தது. அப்பொழுது அவர் நினைத்துப்பார்த்தால், முதல் மூன்று புத்தகங்கள் வெளியிட்டபொழுதும், உடல்நலம் குறைவானது நினைவுவந்தது. அதனால், இனி புத்தகம் வெளியிடக்கூடாதுஎனப் புரிந்தால், வெளியிடாமலிருக்க மனம் வாராது. இங்குத் தெரிகிறது; செய்ய மனமில்லை.

✡ குருவைப் போய்ப் பார்த்துவிட்டுவந்தால் வீடு பற்றிஎரிகிறது. இது குருவால்எனப் புரியாமல் குருவின் ஆசீர்வாதத்தை மீறி கஷ்டம் வந்ததாக நினைக்கிறான். குருவிடம் போய்ச்சொல்கிறான். திரும்பி வந்தால் மகன் வீட்டைவிட்டு ஓடிவிடுகிறான். இந்தத் தொடர்பு தெரியாத நேரம் உண்டு. தெரியாவிட்டால்என்ன செய்வது?



✡ தெரியாவிட்டால், எதுவும் செய்யாமலிருப்பது நல்லது.

✡ *எதுவும் செய்யாமலிருப்பது தெய்வநம்பிக்கை.*

✡ பிள்ளையைக் கறி சமைத்துக்கொடுஎன்றவுடன் சிறுத்தொண்டர் அப்படியே செய்தார். எல்லோரும் அதைச் செய்யமுடியாது.

✡ முடியாதவர்என்ன செய்வது?

❀ எதுவும் செய்யக்கூடாது.

❀ எதுவும் செய்யாவிட்டால் நெஞ்சு பதறுகிறது.

❀ நெஞ்சு பதறாமலிருப்பது அவசியம்.

❀ நெஞ்சு பதறாவிட்டாலும் சமத்துவம், நிதானமிருக்காது.

❀ அவையும் இருப்பது அவசியம்.

❀ அப்படி அவையிருந்தால் அதற்குத் தெய்வநம்பிக்கைஎனப் பெயர்.

❀❀❀

**850. ஆர்வம் அடக்கமுடியாமல் பீறிட்டெழுந்தால் அது தீவிரமாகி சத்தியஜீவிய அலையோசையாகிறது.**

*அடக்கமுடியாத ஆர்வம் அற்புதத்தின் அலையோசை.*

✡ அளவு பெரியதாகும்பொழுது தரமும் உயர்வது இயற்கை.

✡ வளரும் அளவு தவறானதாக இல்லாமலிருந்தால், தரம் தானே உயரும்.

✡ மனத்தின் ஆர்வம் சத்தியஜீவிய ஆர்வமாக மாற,

❀ *ஆர்வம் ஆசைக்காக இருக்கக்கூடாது.*

❀ *ஆர்வம் மௌனம் பெறவேண்டும்.*

❀ *மௌனம் ஜோதியாகும் அடுத்த நிலைக்கு வரவேண்டும்.*

❀ *ஜோதி ஞானமாவது அவசியமான அடுத்த கட்டம்.*

❀ *ஞானம் தெய்வமயமாவது அடுத்தது எனினும், அவசியமானதன்று.*

❀ *அடுத்ததே சத்தியஜீவியம்.*

✡ **பாடத்தை மாணவன் தலைவிதியேஎனப் படிப்பதைவிட,**

❀ **பாடத்தின்மீது ஆசையாகப் படிப்பது.**

❀ **அந்த ஆசையையும் மாற்றி வேலையில் ஆர்வமாக்கவேண்டும்.**

❀ **அந்த** ***ஆர்வம் மௌனம், ஜோதி, ஞானம், தெய்வமாவது மனம் சத்தியஜீவியத்திற்குப் போகும் பாதை.***

✡ **அதுவே முறையானால், அப்படியின்றி மனத்தின் ஆர்வம் உயர்ந்து பீறிட்டெழும்பொழுது தீவிரமானால், அதன் வேகம், தீவிரம் தானே ஓரளவுக்கு சத்தியஜீவிய அலையாகும்.**

✡ **அறிவோடு செயல்படுவதே அழகுஎன்றாலும், அறிவில்லாதவன் உழைப்பால் தன் முயற்சியை ஆயிரம் மடங்கு உயர்த்தும்பொழுது அந்த உழைப்பு உயர்ந்து உன்னதம் பெறுவதை வாழ்வில் நாம்**

**"உழைப்பால் உயர்ந்த உத்தமர்"**

**எனக் கூறுகிறோம்.**

✡ **அது சத்தியஜீவியத்தை அவ்விதம் எட்டுவதுண்டு.**

**எட்டுவதுடன் அது அழகுற அமைந்து, அலையாக எழுந்து, இசையாக மாறி, அலையோசையை எழுப்புவதும் உண்டு.**

❀❀❀

தொடரும்.....

**ஜீவிய மணி**

**சிறியதை விட்டுப் பெரியதை நாடுவது வாழ்வில் ஆன்மாவின் மலர்ச்சி.**





# மனமாற்றம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

"ஆமாம். அவரைப் பெரும்பாலோர்க்குச் சுதந்திரப்போராட்ட வீரராய்த்தான் தெரியும். இந்தத் தியானமையத்தின்மூலம்தான் நான் அவர் பெருமைகளை உணர்ந்தேன். அவர் சாதாரண மனிதரல்லர். அவர் ஒரு பூரணயோகி"என்றார் மிஸ்.

"பூரணயோகிஎன்றால் என்ன மிஸ்?"என்றாள் ஆஷா.

"அது மிகப்பெரிய விஷயம். இருந்தாலும் சிறிது சொல்கிறேன். ***அதாவது முனிவர்களைப்போல் வாழ்வைத்துறந்து காட்டிற்குப்போய் தவம்செய்து மோட்சம்பெற்று தான்மட்டும் கடைத்தேறுவதுபோல் இல்லாமல் வாழ்வில் இருந்துகொண்டு, உடல், உணர்வு, மனம்என்பவற்றைப் புனிதப்படுத்தி மோட்சத்தை விரும்பாமல் சத்தியஜீவியம்என்ற உயர்சக்தியைப் பூமிக்குக்கொண்டுவந்து, அதனால் இங்குள்ள மரணம், வறுமை, நோய், அறியாமை, சிறுமைபோன்ற துன்பங்களையெல்லாம் அழித்து, நம்மைப் பூலோகத்திலேயே சொர்க்கலோக வாழ்வை வாழச் செய்வதுதான் பூரணயோகம்***".

"அது சரி, மிஸ்! ஸ்ரீ அன்னைஎன்று ஒருவர் திருவுருவமும் அங்கிருந்ததே, அவர் யார்? அவருக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்?"என்றாள்.

**"ஸ்ரீ அரவிந்தரின் பூரணயோகத்தை நிறைவேற்ற பராசக்தி ஸ்ரீ அன்னை வடிவில்வந்து துணைநின்றதாகக் கூறுகிறார்கள். ஸ்ரீ அரவிந்தர் தம் யோகப்பலனை அவரிடம் ஒப்படைத்திருக்கிறார். சூட்சும நிலையில் இருந்துகொண்டு ஸ்ரீ அன்னைதாம் நமக்கு**

**அருள்செய்கிறார்**. அதுபற்றியெல்லாம் நீ படிப்படியாகத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். **இந்த மையம் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் இவர்களை நினைத்துத் தியானம்செய்து, அவர்களுடைய யோகப்பலனை நமக்கு வேண்டிய வாழ்வுப்பலனாக நமக்குத் தரும் இடம்**. நீ வகுப்பில் முதல் மாணவியாய் இருந்தவள். இம்முறை திடீரென உன் கவனம் குறைந்துவிட்டது. நீ ஏதோ அமைதியில்லாமல் இருப்பதுபோல் தோன்றியது. அதனால் உன் பிரச்சினை எதுவாயினும் அன்னை தீர்க்கட்டும்என்று உன்னை அழைத்துவந்தேன்''என்றார் குமாரி மிஸ்.

'இவருக்குத் தன்மீது இவ்வளவு அக்கறையா? மாதவியிடம் அவ்வளவு பரிவுகாட்டுபவராயிற்றே'என்று ஆஷாவின் சிந்தனை ஓடியது.

''என்ன ஆஷா! மலைத்துப்போய் நிற்கிறாய்? மாதவியிடம் பரிவு காட்டுகிறேன்என்றா? ஆமாம். அவளும் என் மாணவி. அவள் தன்னிலையில் குறையாமலிருக்கிறாள். நீயும் அப்படியிருக்கவேண்டும் என்பதுதான் என் ஆவல். ஓர் ஆசிரியருக்கு எல்லா மாணவர்கள்மீதும் பிரியமும், அக்கறையும் உண்டு. அவரவர் தன்மைக்கேற்ப மென்மையாகக் கையாள்கிறோம். எங்களுக்கு வேறுபாடு ஒன்றுமில்லை''.

தன் அகக்குறிப்பையுணர்ந்து குமாரி விளக்கம் சொல்லவும் ஆஷாவிற்குப் பிரமிப்பாயிருந்தது. ''ரொம்ப தாங்ஸ் மிஸ். நீங்கள் தினமும் இங்கு வருவீர்களா?''என்று கேட்டாள்.

''ஆமாம். இங்கு தினமும் ஏழுமுதல் ஏழரைவரை தியானம் உண்டு. மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில்மட்டும் ஆறு மணிமுதல் எட்டுமணிவரை விரிவாக நடக்கும். அதில் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் நூல்கள் படிக்கப்படும். அன்னையால் பயன்பெற்ற அன்பர்கள் தம் அனுபவங்களைக் கூறுவார்கள். சிறப்புச் சொற்பொழிவும் உண்டு'' என்றார் குமாரி.

இன்று ஆஷாவிற்கு ஓரமைதி கிடைத்தது; உற்சாகமாயிருந்தது. மனதிலிருந்த ஏதோவொன்று விலகி வழிவிடுவதுபோலிருந்தது. தெளிவாகப் புரியவில்லை.



மறுநாள் வகுப்பில் ஆஷா சற்றுத் தெளிவாய் இருந்தாள். இருந்தாலும் பழையகுணங்கள் சிறிது, சிறிதாய் வெளிப்படத்தான் செய்தன. மாதவியையும், பிரியாவையும் பொருட்படுத்தாமல் தான் வகுப்பில் முன்னேற முடிவுசெய்தாள். அவள் சற்றுத்தெளிந்தவுடன் பழைய தோழியர் கூட்டம் அவளைச் சூழ்ந்தது. அணித்தலைவிபோல் பழையபடி நடந்துகொண்டாள். எல்லோரும் அவள் பேச்சைக்கேட்டுநடந்தனர். அவளே, புரியாதவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தாள். கணிதம் கற்பித்தாள். பழையகர்வத்துடன் சொல்லிக்கொடுத்தாள். அதேசமயம் மாதவிபோல் படிப்பில் அதிககவனம் செலுத்தி, மற்றதைத் தவிர்க்க நினைத்தாள்.

கணிதஆசிரியர் கலாவதி போர்டில் கணக்குப்போட்டு வழிமுறைகளை விளக்கிக்கொண்டிருந்தார். இடையில் தவறுதலாக ஓரிலக்கம் போட்டு கணக்கை முடித்துவிட்டார். ஓரிடத்தில் சிறுதவறு நேர்ந்தாலும் சிக்கல்விழுந்த நூற்கண்டுபோல் முழுவதும் தவறாயிற்று. ஆஷா நுட்பமாய் கவனித்துக்கொண்டிருந்தாள். மாதவியும் கவனமாய் கவனித்து எடுத்தெழுதிக்கொண்டிருந்தாள்.

ஆஷா எழுந்து, ''மிஸ்! தவறாகப்போட்டிருக்கிறீர்கள்''என்று தவறான இலக்கத்தைச் சுட்டிக்காட்டினாள்.

கலாவதிமிஸ் சற்றுப் படபடப்பான சுபாவம் உள்ளவர். அரிதாக எப்பொழுதேனும் இப்படிப் பிழை நேர்ந்துவிடும். அப்போது இரண்டாம்முறை போர்டைக் கவனிக்கும்போது தாமே பிழையைத் திருத்தி, தவறுதலுக்கு மன்னிப்புக்கேட்பார். இப்பொழுது கடும்தலைவலியால் மீண்டும் ஒருமுறை கணிதத்தைச் சரிபார்க்கத் தவறியதால் பிழையைத் திருத்தவில்லை.

ஆஷாவின் திறமையை வாய்விட்டுப்பாராட்டினார். ''மாணவிகள் எப்போதும் இப்படித்தான் கவனமாயிருக்கவேண்டும்''என்றார். ஆஷா பெருமிதமாய் நின்றாள்.

மாதவி ஏன் பிழையைக் கவனிக்கவில்லை. கணிதத்தில் முதலிடம் பெறும் மாணவியாயிற்றேஎன்று கலாவதிக்கு வியப்பாயிருந்தது. அடுத்த ஆண்டு இவர்கள் பொதுத்தேர்வு எழுதவேண்டியவர்கள். பள்ளிக்கு நற்பெயர் பெற்றுத்தரும் மாணவர்களைக் கவனமாய்த் திருத்துவது ஆசிரியர் பொறுப்பல்லவா?

"ஆஷா! மாதவியின் நோட்புக்கை வாங்கிவா"என்றார் கலாவதி.

அவளும் தவறாகப்போட்டிருப்பாள். தான்மட்டுமே வகுப்பில் கெட்டிக்காரமாணவிஎன்ற அகந்தையில் மாதவியின் நோட்புக்கை வாங்கி மிஸ்ஸிடம் கொடுத்துவிட்டு பக்கத்தில்நின்று பார்த்தவள் திடுக்கிட்டாள். மாதவி பிழையான இலக்கத்தை நீக்கி சரியானமுறையில் போட்டிருந்தாள். கலாவதிக்கு மகிழ்ச்சி. ஆஷாவுக்கு எரிச்சலும், ஏமாற்றமும்.

"மாதவி! இங்கே வா"என்றார் கலாவதிமிஸ். பணிவுடன் எழுந்துவந்த மாதவி, ஆசிரியர் அமரும் மேடையின் இடப்பக்கப்படியில் ஏறி பக்கத்தில் வந்து அமைதியாக நின்றாள்.

"மாதவி! நீ சரியாகப்போட்டிருக்கிறாய். ஏன் போர்டில் உள்ள பிழையைச் சுட்டிக்காட்டவில்லை"என்றார் மெலிதாக.

பதிலேதும் கூறாமல் அமைதியாய் நின்றாள் மாதவி.

"ஏன் மாதவி சொல்லவில்லை? நீமட்டும் சரியாய்போட்டு, நாங்கள் தவறாகப்போடவேண்டும்என்று சொல்லவில்லையா?"என்றாள் ஆஷா கேலியாக.

மிஸ், மாதவியைப்பார்த்து, "சீச்சி, அவள் அப்படிப்பட்ட பெண்ணில்லை"என்று கூறி, "சொல் மாதவி, ஏன் என்னிடம் தவற்றைச் சுட்டவில்லை?"என்றார்.

"மரியாதையில்லைஎன்றெண்ணி சொல்லவில்லை மிஸ். நீங்கள் இரண்டாம்முறை போர்டைப்பார்த்து திருத்துவீர்கள்என்றிருந்தேன்" என்றாள் மாதவி.



அவள் பண்பு கலாவதியை நெகிழச்செய்தது. "பரவாயில்லை, மாதவி! நீ பள்ளிக்குப் பெயர்வாங்கித்தரவேண்டிய மாணவி. நீ தவறு செய்யாத வரை எனக்கு மகிழ்ச்சிதான். ஆஷாதான் சுட்டிக்காட்டிவிட்டாளே"என்று அவளையும் பாராட்டினார்.

ஆஷாவிற்கு அடிபட்ட உணர்வு ஏற்பட்டது. மீண்டும் மனம் சரிந்து விடும்போலிருந்தது. வரும் ஞாயிறு மாதத்தின் கடைசி ஞாயிறு. முன்பு குமாரிமிஸ் அழைத்துப்போன தியான மையத்திற்குப் போகவேண்டும்என்று தோன்றியது.

குமாரியிடம் சென்று, "இந்த ஞாயிற்றுக்கிழமை உங்களுடன் தியானமையம் வருகிறேன் மிஸ்"என்றாள்.

"சரியாக 5.30க்கு வந்துவிடு. நாம் ஆறு மணிக்குமுன் அங்கிருக்க வேண்டும். காலம் தவறுதல், வார்த்தை தவறுதல், அலட்சிய மனப்பான்மை, இவை அன்னைக்குப் பிடிக்காதவை"என்றார் குமாரி.

"சரியாக மாலை 5.30க்கு உங்கள்முன் இருப்பேன் மிஸ்"என்றாள் ஆஷா.

அன்று இறுதி ஞாயிறு; சிறப்புக்கூட்டம். ஆதலால், நிறையபேர் வந்திருந்தனர். எல்லோர் முகத்திலும் மலர்ச்சி. அன்று ஆஷா தன் வீட்டில், தான் தொட்டியில் வளர்க்கும் ரோஜாச்செடியிலிருந்து ரோஜாப்பூக்கள் கொண்டுவந்து அன்னைக்குச் சமர்ப்பித்தாள்.

கடிகாரம் ஆறு முறை ஒலித்து ஓய்ந்ததும் தயாராய்க் காத்துக் கொண்டிருந்த ஒரு கல்லூரிமாணவி, **'சாவித்ரி'** என்ற காவியத்திலிருந்து சிலபகுதிகளைப் படித்தாள்.

ஒரிளைஞர் **'பிரார்த்தனையும், தியானமும்'** என்ற நூலிலிருந்து ஒரு பகுதியைப் படித்தார்.

***"சிலசமயங்களில் பழைய அனுபவங்களின் நினைவைக்கூட சிந்தனையிலிருந்து துடைத்துவிடவேண்டும். இல்லாவிட்டால், இடைவிடாது புதிது, புதிதாகக் கட்டிக்கொண்டிருக்கவேண்டிய வேலையில் அது தடையாக இருக்கும். எல்லாம்***

*சார்ப்புத்தன்மைகொண்டவைகளாகவே உள்ள உலகில் இடைவிடாது புதுப்பித்தலினாலேயே நினது பூரண வெளிப்பாடு சாத்தியமாகும்"* என்ற அந்தச் செய்தி அவளுக்கு எதையோ உணர்த்துவதுபோலிருந்தது.

அடுத்தது ஓரன்னை அன்பர் தம் அனுபவத்தை விவரித்தார்.

எங்கள் வீட்டில் குழந்தைகளைச் சேர்த்து ஆறுபேர் இருக்கிறோம். அன்றாடம் ஒருவேளைக்கு 1 லிட்டருக்குமேல் பால் வாங்கமுடியாத பொருளாதாரம். எனவே, பால்காரர் தண்ணீர்ஊற்றிக் கொடுக்கும் பாலில் நானும் தண்ணீர் ஊற்றித்தான் காபியோ, பூஸ்ட்டோ கொடுப்பேன். தினமும் எல்லோரும் நான் மிகவும் தண்ணீர் ஊற்றுகிறேன்என்று குறை சொல்வார்கள். எனக்கு வருத்தம்தான். நான் என்ன செய்ய? பால்காரர் நல்லபாலாகக் கொடுத்தால் இந்தப் பிரச்சினை வாராது. பால்கார முனியனும் மிகவும் நல்லவன்தான். ஒரே பசு வைத்திருப்பதால் தனக்கு வேறு வழியில்லைஎன்றும், இன்னும் ஒரு பசுவாவது இருந்தால் நல்லபால் தருவேன்என்றான்.

பால் தண்ணீராகவுள்ளதுஎன்று குறைகூறுவதற்குப்பதிலாக, அவன் இன்னொரு பசு வாங்க உதவினால் அன்னையை ஏற்றதுபோலிருக்கும். அந்த நல்லமனம் வேண்டும்என்று அன்னையிடம் பிரார்த்தித்தேன். திடீரென ஒரு யோசனை தோன்றியது. இப்பொழுது காலம் உள்ள நிலையில் பொன்னகை அணிவது பெரும்ஆபத்தாகவுள்ளது. இந்நிலையில் எவ்வித பயனுமின்றி உள்ளே வைத்திருக்கும் பொன்னகையை விற்று, முனியனுக்கு இரண்டு பசுக்கள் வாங்கிக்கொடுத்தால் நல்லபால் தருவான். அவனும் நல்லமுறையில் வாழ்வான்என்று தோன்றியது. நாங்களே பசு வைத்துக்கொள்ளலாம்என்றால் வாடகைவீடு, ஆள் வசதியும் கிடையாது. எனவே, முனியனுக்காவது வாங்கித்தந்தால், அவன் குடும்பமும் பிழைக்கும்; நமக்கும் நல்லபால் கிடைக்கும். இது சற்று கடுமையான யோசனைதான். ஏனென்றால், நகையை விற்பதற்கு என் கணவரும், என் மாமியாரும் ஒப்புக்கொள்ளவேண்டும். யோசனையை எடுத்துச்சொல்லவே தயக்கமாய் இருந்தது. ஆனாலும், எப்படியும் முனியனுக்கு உதவ மனம் எண்ணியது. எனவே, அன்னையைப் பிரார்த்தித்து, கையில் சுமுகமலரை வைத்துக்கொண்டு, என் கணவரிடம் இதைச் சொன்னேன். அவரோ, "பரவாயில்லையே! மாட்டை விற்று



நகை வாங்கலாம்என்றுதான் பெண்களால் சொல்லமுடியும்என்று நினைத்தேன். நீ நகையை விற்று பசு வாங்க, அதுவும் பால்காரனுக்கு வாங்கிக்கொடுக்க ஆசைப்படுவது பாராட்டப்படவேண்டியதுதான். நகையிருந்தால்மட்டும் போட்டுக்கொள்ள முடிகிறதாஎன்ன?"என்று பாராட்டிப் பேசினார். முதல் அச்சம் தீர்ந்தது. அடுத்தது மாமியாரிடம் பிரச்சினை சொல்லப்படவேண்டும். அவரே என் மாமியாரிடம் எடுத்துச் சொன்னார். மாமியார் என்ன சொல்வாரோஎன்று பயந்துக்கொண்டு இருந்தேன். என்ன வியப்பு!

"எனக்கே நீண்டநாட்களாய்ப் பசும்பால் சாப்பிடவேண்டும்என்ற ஆசை. இந்த வயதானகாலத்தில் எனக்கு வேறென்னவேண்டும். ஆனால் பாவம், அவளுக்கிருப்பது ஒரு நகை. அதையும் விற்றுவிட்டால் இப்போதைக்கு வேறு வாங்கமுடியுமாஎன்ன?"என்றார்.

தொடரும்.......

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உடலாலானவன், உணர்வாலானவன் மனமுடையவனல்லன். அவனால் மனத்தைப் பயன்படுத்தமுடியாது. மனத்தால் சிந்திக்க அவன் முதலில் மனத்தைப் பெறவேண்டும். அதேபோல் நன்மையைக் (good) கருதும் நிலை அவனுள் இல்லை. அதைச்செய்ய சத்தியஜீவியத்தைப் பெறவேண்டும். ஜீவனின் பகுதிகளான ஒரு புருஷனை (உ.ம். மனோமயப் புருஷன்) நாடுவதால் இதைப் பெறமுடியாது. சைத்தியப் புருஷனை நாடினால் இது முடியும். பகவான் பத்து வருஷங்களாகத் தேடிய சூட்சும இரகஸ்யம் இது.

***பூரணயோகப் பரிணாம இரகஸ்யம்.***

**The human reason attempts to define and limits by negation the Infinite and Illimitable.**

**அனந்தமான முடிவற்றதை அறிவு இல்லாததைக்கொண்டு விளக்க முயல்கிறது.**

✡ விளக்கம்என்றால் அதன் பகுதிகளையும், அம்சங்களையும் கூறி விவரிப்பதுஎனப் பொருள்.

✡ ஆசிரமம்என்றால் என்னஎன்ற கேள்விக்கு அங்குள்ளவர் எப்படிப் பட்டவர், யார் அவர்எனக் கூறுவது விளக்கம்எனப்படும்.

❀ வாழ்வைத் துறந்து இறைவனைத் தேடுபவர் சேருமிடம் ஆசிரமம்.

❀ அவர்கள் தியானத்தை மேற்கொள்பவர்கள்.

❀ முடியும், தாடியும் உடையவர்.

❀ காவி உடுப்பவர் போன்றவை விளக்கம்எனப்படும்.

✡ *பிரம்மம்என்பது ஒன்று. அதுபோல் வேறொன்றில்லைஎன்பதால் பிரம்மத்திற்கு உதாரணமாக எதையும் கூறமுடியாது.* சூரியன் ஒன்றே. அதற்கு உதாரணம் கூறமுடியாது.

✡ யானையை விளக்கவேண்டுமானால், அது 4 கால்கள் உடைய பிராணிஎன்பதால், மாட்டை உதாரணமாகக் கூறலாம். துதிக்கை உள்ள பிராணியில்லைஎன்பதால் துதிக்கைக்கு உதாரணம் கூற முடியாது. இது உள்ளதைக்கொண்டு விளக்குவதாகும். 'இப்படியில்லை' எனக் கூறுவது negative definition. யானையை விளக்க அது மேஜைபோலில்லை, மரம்போலில்லை, பேனாவைப்போலில்லைஎன்றால் என்ன புரியும்? பேனாவைப்போல் யானையில்லைஎன்பது சரி. அதனால் யானை விளங்குமா? விளங்காது.



✡ நாம் அறிபவை அனைத்தும் - கடல், மரம், உணவு, ஊர், பேப்பர், குழந்தைபோன்ற அனைத்தும் - அளவுக்குட்பட்டவை. *அளவுக்குட் படாதது நம் மனத்திற்கு எட்டாதது. அளவுக்குட்படாததை அளவுக்கு உட்பட்டவற்றைக்கொண்டு விளக்க முயல்வது பயன் தாராது.*

✡ பிரம்மத்தை விளக்க முடியாது. விளக்க முற்படுபவர்கள் பயன்படுத்தும் முறை இரண்டு.

❀ இல்லாததைக்கொண்டு விளக்குவது.

❀ அனந்தமானதை, அளவுக்குட்படாததை அளவுக்குட்பட்டதன் மூலம் விளக்குவது.

இவ்விரண்டு முறைகளும் பயன் தாரா.

✡ ஏதாவது முறை பயன் தருமா?

❀ பலர் பலவிதமாகக் கூறிய அனைத்தையும் தொகுத்து மனத்தால் நிறைவுசெய்து பார்த்தால் ஓரளவு பயன் தரும்.

❀ ஒரு மெஷினைப் பிரித்தபின், அதன் பகுதிகள் அனைத்தையும் ஒரு கூடையில் சேர்த்தால் அது மெஷினாகாது. *எல்லாப் பகுதிகளின் தொகுதி முழுமையாகாது. இவை அனைத்தும் பொருத்தமாகச் சேர்ந்தால் அது மெஷினாகும்என்பதை மனதால், அறிவால் பூர்த்திசெய்யலாம். அப்படி பிரம்மத்தை அறிய முற்பட்டால் நாம் மனத்தைக்கடந்து சத்தியஜீவியத்தைத் தொடுவதால் ஓரளவு புரியும்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆயிரம் முறை திரும்பத் திரும்ப எழும் உந்துதலானாலும், இடைவிடாது சமர்ப்பணம் செய்தால் அது மாறும்.

*நாய் வாலும், மனித சுபாவமும் சமர்ப்பணத்திற்கு அடங்கும்.*

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184) Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. 30 |
| 2. | Sri Aravindam | ரூ. 40 |
| 3. | Luck | ரூ. 50 |
| 4. | A Discussion on The Life Divine | ரூ.100 |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.120 |
| 6. | Spirituality and Prosperity - I | ரூ.125 |
| 7. | Spirituality and Prosperity - II | ரூ.200 |
| 8. | Spirituality and Prosperity - III | ரூ.125 |
| 9. | Spirituality and Prosperity - IV | ரூ.125 |
| 10. | Spirituality and Prosperity - V | ரூ.125 |
| 11. | Spiritual Opulence | ரூ.200 |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | ஐம்பது இலட்சம் | சமர்ப்பணன் | ரூ. 50 |
| 9. | $ 100,000 | William Learner | ரூ. 50 |
| 10. | Honey, Let's Make Money | Ken Gold | ரூ.150 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# அன்னையை அறிந்தபின்....

ஒரு பக்தர் 1995இல் அன்னையை அறிந்தார். அறிந்ததில் சந்தோஷம். வணங்குவதில் பெருமகிழ்ச்சி. குறிப்பாகப் பிரச்சினைஎன்பது எதுவுமில்லை. சம்பளம் குறைவாக இருப்பதால் வீடுவாங்க நினைக்கவில்லை. நம் நினைவிலில்லாத விஷயங்கட்கும் அன்னையிடம் உயிருண்டு. குறிப்பான நினைவு, பிரார்த்தனை, ஆசைஎன எதுவுமில்லாவிட்டாலும், ஊரில் அனைவரும் பெறுவதை நாமும் பெற நம்மையறியாத ஆசையிருக்கும். அதை subconscious desire, ஆழ்மன ஆசைஎனக் கூறுவர். நமக்கு ஆசையிருந்து முடியாமல் மறந்துபோனது ஆழ்மனத்திலிருக்கும். அதேபோல் நாம் ஆசைப்படமுடியாததவை நம் ஆழ்மனத்திலிருக்கும். இந்த அன்பர் வீடுவாங்க நினைக்கவில்லை. அவர் கூறுவது,

- ✡ *''எதிர்பாராமல் ஒரு நல்ல வேலை கிடைத்தது. அதனால் டபுள் பெட்ரூம் பிளாட் வாங்க முடிந்தது''.*
- ✡ *''வீடு வாங்க நாங்கள் நகை விற்கவில்லை. ஆனால், பழைய கடன் ஒன்று தானாக வசூலாயிற்று. நகை வாங்கினோம்''.*
- ✡ *''எல்லோருக்கும் பிரச்சினையாகஉள்ள பள்ளிஅட்மிஷன் எங்கட்கு எந்தப் பிரச்சினையுமின்றி எளிதாக எல்லாக் குழந்தைகட்கும் கிடைத்தது''.*
- ✡ *''எனக்கு கார் வாங்க பயம். அதற்கும் பணம் கட்டவேண்டும். கார் வாங்கும் எண்ணம் நிறைவேறவில்லை''.*
- ✡ **"*நூறு பேர்கள்* என்ற நூலில் *இதுவரை உனக்கு கிடைத்தவை உன் தகுதிக்கா கிடைத்தது''* என்பதை பார்த்தபின்.....கார் வாங்கும் எண்ணத்தை சமர்ப்பணம் செய்தேன்.... ஒரே மாதத்தில் சொந்தக் கார் வாங்கியாகிவிட்டது.**

அன்னையை வணங்கும் சர்க்கார் ஊழியர் ஒருவர் கூறுவதாவது, "நாம் எதைக் கேட்டாலும் அன்னை தருகிறார். நம் குறைகளுக்காக அவர் எதையும் மறுப்பதில்லை. அவர் தருவதும் நம் தகுதிக்கன்று, நாம் கேட்பதற்காக. அன்னை சாதாரண சக்தியில்லை. எதனுடனும் அன்னையை ஒப்பிடமுடியாது. சர்க்கார் எடுத்த முடிவை சர்க்காரே மாற்றி நான் கேட்டவற்றை எனக்கும், என்போன்ற எல்லா ஊழியர்கட்கும் அன்னை வழங்கியது என் அனுபவம்''.

❀❀❀

# ''எனக்குத் தகுதியில்லை''

எனக்குத் தகுதியில்லைஎன்பது பேராசையற்ற அடக்கவுணர்வு. அடக்கவுணர்வுக்கு அனைத்தும் உண்டு. ஆன்மாவால் ஏற்பட்ட அடக்கத்திற்கு வலிமையுண்டு. பயத்தால் ஏற்பட்ட அடக்கத்திற்கு பயத்தின் பலன் உண்டு. ஆஸ்துமா, அலர்ஜியால் பீடிக்கப்பட்டவர் மையம் வந்து பிரார்த்தனை செய்து அவற்றினின்று விடுதலைபெற்றார். ''என் கையில் 45/- ரூபாய்மட்டும் இருந்தது. அதைச் செலவுசெய்ய பயம், தயக்கம். அன்னை கொள்கைப்படி, அன்னையை நம்பி செலவுசெய்தால் சம்பளம் வரும்வரை செலவுக்குப் பணம் வரும்என செலவிட்டேன். எப்பொழுதோ கைமாற்று என்னிடம் வாங்கியவர் அந்த 1,000 ரூபாயைத் திருப்பிக்கொடுத்தது எனக்கு ஆச்சரியமாக உள்ளது''என அவர் கூறுகிறார். அது அவருக்கு அன்றே கிடைத்ததாம். அவர் கூறும் சில அனுபவங்கள்:

- ✡ *இரண்டாண்டிற்குமுன் கடன் தொல்லையால் நான் அன்னையிடம் வந்தேன்.*
- ✡ *அப்பொழுது எனக்கு ரூ.4,390/- மாதச் சம்பளம்.*
- ✡ *வீடு சண்டையும், சச்சரவுமாக இருந்தது.*
- ✡ *சுமுக மலரை நாடினேன்.*
- ✡ *சண்டை விலகி சுமுகம் ஏற்பட்டது.*
- ✡ *இப்பொழுது என் மாதச் சம்பளம் ரூ.9,890/-.*

**அருள்பெற அனைவரும் தகுதியுடையவர்.**
**ஆன்மீக அடக்கத்துடன் அதைப் பெறுவது நல்லது.**

❀❀❀